பக்கங்கள் - 23

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 20 செவ்வாய்க்கிழமை 03.02.2026 | அதிர்வு 186

## பரபரப்புக்கு மத்தியில் இன்று கூடுகின்றது நாடாளுமன்றம்!



இலங்கை நாடாளுமன்றம் இன்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கூடவுள்ளது.

தற்போதைய அரசியல் 04▶

# என்.பி.பி. வாக்கு வங்கி சரிவு அரசுக்கு படுதோல்விப் பயம்

## மாகாண சபைத் தேர்தல் தள்ளிப்போவதற்கு இதுவே காரணம் என்று கம்மன்பில சுட்டிக்காட்டு

“தேர்தலை நடத்தினால் படுதோல்விய டைவது உறுதி என்பதால் அரசு மாகாண சபைத் தேர்தலை நடத்தாது. தேசிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கி 20 சதவீதமள வுக்குக் குறைவடைந்துள்ளது.”

- இவ்வாறு பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்ச ருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுறு ஹெல உறுமய கட்சிக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, “புதிய கல்வி மறுசீரமைப்பு 03▶



# தேர்தல் காலப் பொய்கள் இன்று நிஜமாகின்றன!

## சி.ஐ.டி. விசாரணையின் பின்னர் அரசு மீது பிரசன்ன கடும் தாக்கு



“தேசிய மக்கள் சக்தி தேர்தல் காலத்தில் கூறியது பொய் என்பதை நாட்டு மக்கள் தற்போது உணர ஆரம்பித்துள்ளனர்.”

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அவர் நேற்று விசாரணைக்கு வந்திருந்தார்.

விசாரணைகளின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையி 03▶

## நாளை கரிநாளுக்கு தமிழரசும் ஆதரவு!



நாளை வரும் இலங்கையின் சுதந்திர தினத்தைக் கரிநாளாக அனுஷ்டித்து எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்ற யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களின் அழைப்புக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி தன்னுடைய முழு ஆதரவை வழங்கியிருக்கின்றது. 03▶




அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினர் பதவியை விட்டு விலகுமாறு சிறிதரன் எம்.பிக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு வழங்கிய பணிப்புரை, அதை ஏற்க மறுத்த சிறிதரனின் செயற்பாடு தொடர்பில் அதிருப்தியுற்றுள்ள கட்சியின் அரசியல் குழு, அவரின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் பதவியை பறிப்பதற்கு எடுத்த முடிவு போன்றவற்றினால் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடி தீர்க்கப்பட்டாலும், அதன் பின்னர் எழக் கூடிய மிக மோசமான சிக்கல்கள் குறித்து இப்போதே எதிர்வு கூறப்படுகின்றது.

அது தொடர்பான கட்டியம் நேற்று நெடுங்கேணியில் நடைபெற்ற கிவுல் ஓயாத் திட்டத்துக்கு எதிரான போராட்டத்தின் போது வெளிப்பட்டது என்று விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

நேற்றைய போராட்டத்திற்குப் பல இடங்களில் இருந்தும் ஆயிரத்துக்கும் அதிகமானோர் வந்து பங்குபற்றிச் சென்றார்கள் 03▶




# மோட்டார் சைக்கிள் மோதி பெண் ஒருவர் உயிரிழப்பு!

மோட்டார் சைக்கிள் மோதி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் அனுராதபுரம் – மாத்தளை சந்தி பகுதியில் நேற்று திங்கட்கிழமை மதியம் இடம்பெற்றுள்ளது என்று மிஹிந்தலை பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு தெரிவித்துள்ளது.

மிஹிந்தலையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று, மேற்படி பெண் மீது மோதியதில், இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் மற்றும் பாதசாரி பெண் ஆகியோர் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் பாதசாரி உயிரிழந்தார்.

உயிரிழந்த பெண் சுமார் 65 வயது மதிக்கத்தக்கவர் எவும், அவரது அடையாளம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மிஹிந்தலை பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு, மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.



## மத்துகம பொலிஸ் நிலையத்தில்

# கைத்துப்பாக்கி, தோட்டாக்கள் மாயம்: பொலிஸ் அதிகாரிகள் இருவர் கைது!

மத்துகம பொலிஸ் நிலையத்தில் இருந்து ஒரு கைத்துப்பாக்கி மற்றும் 10 தோட்டாக்கள் காணாமல்போன சம்பவம் தொடர்பில் பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் கான்ஸ்டபிள் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 26ஆம் திகதி முதல், குறித்த கைத்துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் காணாமல்போயுள்ளன என்று ஆவண சோதனையின் போது தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மத்துகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# காயங்களுடன் பெண்ணின் சடலம் மீட்பு!



தோட்டப் பகுதியில் காயங்களுடன் வயோதிபப் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

களுத்துறை, அகலவத்தை, திரிவானகெட்டிய தோட்டப் பகுதியில் இருந்து நேற்று இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் திரிவானகெட்டிய தோட்டப் பகுதியைச் சேர்ந்த 74 வயதுடைய வயோதிபப் பெண் என்று களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பெண்ணின் மரணத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பது கண்கூடு.

சிறிதரனும் தமது கிளிநொச்சிப் பிரதேசத்தில் இருந்து தமது ஆதரவாளர்களை இந்தப் போராட்டத்திற்கு அழைத்து வந்திருந்தார். போராட்டம் முழுவதும் பெரும்பாலும் அந்த ஆதரவாளர்களுக்கு மத்தியிலேதான் அவர் காணப்பட்டார். போராட்டத்தில் ஏனைய தலைவர்களோடு முன்னிலைக்கு அவர் வரவில்லை.

அப்படி பின்னடித்து நின்ற சிறிதரனை முன்னுக்கு வாருங்கள் என்று அழைத்துச் செல்ல தமிழரசு அல்லாத பிறிதொரு கட்சியின் தலைவர் அவரை நெருங்கிய போது சிறிதரன் தமது ஆதரவாளர்கள் மத்தியில் நின்று கொண்டு பலத்த குரலில் அவருக்குச் சொன்ன பதில், எதிர்காலத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை மட்டத்துக்குள் வெடிக்கப் போகின்ற ஆழமான கருத்தியல் சர்சைக்கான முன்னோட்டமாக கொள்ளலாம்.

தலைவர்கள் நேற்றைய போராட்டத்தின் போது முன்னணியில் ஒன்று கூடியிருந்த இடத்தில் சமத்துவக் கட்சியின் தலைவரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரும் இருந்தார்.

சந்திரகுமார் இருக்கும் இடத்திற்கு தாம் வரவே மாட்டார் என்ற பதிலைத் தான் மேற்படி மற்றைய கட்சியின் தலைவருக்கு சிறிதரன் சத்தமாகக் கூறியிருக்கிறார்.

தமிழர் தாயகத்தில் குடியேற்றப்படும் சிங்களவர்களுக்கு அரச காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வில் பங்குபற்றி, அந்த உறுதிகளை வழங்கிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார். அவருக்கும் இருக்கும் இடத்துக்குத் தாம் வரவே மாட்டார் என்பதுதான் சிறிதரனின் வாதமாக இருந்தது.

அதாவது சந்திரகுமார் இருக்கும் இடத்திற்கு தாம் வரவே மாட்டார் என்பதுதான் சிறிதரனின் இன்றைய ஒற்றை நிலைப்பாடாகும்.

ஆனால், தமிழரசுக் கட்சியின் தற்போதைய தலைமை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் ஒன்றிணைந்து செயல்படுவதாக இருக்கின்றது.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் சந்திரகுமார் தலைமையிலான சமத்துவக் கட்சி முக்கிய இடம் பெற்றுள்ளது. அது மாத்திரமன்றி, அந்தக் கட்சி சிறிதரனின் கோட்டை எனக் கருதப்படும் கிளிநொச்சியில் கணிசமான உள்ளூராட்சி உறுப்பினர்களையும் கணிசமான வாக்காளர்களின் ஆதரவையும் கொண்டிருக்கின்றது.

ஆக, எதிர்காலத்தில் தமிழரசு - ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி உறவுகள் மேலும் மேம்பாடடைந்து கூட்டமைப்பு உருவத்தைப் பெற்றால், அச்சமயத்தில் சிறிதரன் அணியின் நிலைப்பாடு மிக இக்கட்டாக இருக்கும்.

கிளிநொச்சியில் தமக்குப் போட்டியாக அரசியல் செய்யும் சந்திரகுமாரோடு எந்தச் சமயத்திலும் இணைந்து போகும் எண்ணத்தில் சிறிதரன் இல்லை.

ஆனால் இலங்கைத் தமிழரசுக் கட்சி - ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியுடன் இணக்கம் கண்டு, கூட்டு உருவாகுமானால், அதன் பின்னர் வரக்கூடிய தேர்தல்களில் கிளிநொச்சியில் தமிழரசோடு கூட்டுத்தரப்பாக சமத்துவ கட்சியினரும், அதன் தலைவரும் செயற்பட வேண்டி இருப்பார்கள்.

ஆனால் கிளிநொச்சியைத் தமது தமிழரசுக் கட்சியின் தனித்துவக் கோட்டையாக வைத்திருக்கும் சிறிதரன் எம்.பி, அங்கு சந்திரகுமாரும் உட்பட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியோடு தமது தமிழரசு கட்சி கூட்டமைத்து செயல்பட முடிவு செய்தால் அதன் பின்னர் என்ன செய்வார் என்பதுதான் கேள்வி.

சந்திரகுமாரையும் சகித்துக் கொண்டு, அவரது கட்சியோடு சேர்ந்து அரசியல் செய்ய சிறிதரன் இணங்குவாரா அல்லது முரண்டு பிடித்துக் குழப்பம் செய்வாரா என்பதை அடுத்த தேர்தல் வரும் போதுதான் நாம் அறியக்கூடியதாக இருக்கும்.

ஆயினும், இந்த விடயத்தை வைத்தே கிளிநொச்சி அரசியல் சண்டபிரசண்டம் நிறைந்ததாக நீடிக்கும் என எதிர்பார்க்கலாம்.

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கெஹெல்பத்தர பத்மே (பாதாளக் குழு உறுப்பினர்) என்பவர் எமது ஊரைச் சேர்ந்தவர்.

அரசியல் ரீதியில் அவர் எம்முடன் இணைந்து செயற்பட்டாரா என்பது பற்றி விசாரிக்கவே சி.ஐ.டிக்கு அழைக்கப் பட்டிருந்தேன்.

கெஹெல்பத்தர பத்மேவுடன் எனக்குத் தொடர்பு இல்லை. அவருடைய தந்தையுடன் எமக்குத் தொடர்பு இருக்கின்றது.

தமது இயலாமையை மூடிமறைப்பதற்காகவே இந்த அரசு எம்மை விசாரணைக்கு அழைக்கின்றது.

இந்த அரசு கூறியது பொய் என்பதை மக்கள் உணர ஆரம்பித்துள்ளனர். இதனால் அரசு மீது அதிருப்தி உருவாகியுள்ளது." – என்றார்.

## நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில், இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு தமது கட்சியும் முழு ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

## என்.பி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிற்போடப்பட்டமைக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. கல்வி மறுசீரமைப்பைப் பிற்போடுமாறு நாங்கள் குறிப்பிடவில்லை. குறைபாடுகளைத் திருத்திக்கொள்ளுமாறு மாத்திரமே குறிப்பிட்டோம்.

பாடத்திட்டம் தயாரிப்பின்போது தோற்றம் பெற்ற குறைபாடுகள் மற்றும் தொழில்நுட்பச் சிக்கல்களினால் புதிய கல்விக் கொள்கை 2027 ஆம் ஆண்டு வரை பிற்போடப்பட்டது என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால் கல்வி மறுசீரமைப்பை அமுல்படுத்துவதாகப் பிரதமர் குறிப்பிடுகிறார்.

மக்கள் விடுதலை முன்னணியின் காரியாலயத்தின் தீர்மானத்துக்கு எதிராக ஜனாதிபதி செயற்படுவதால் ஜனாதிபதியின் அறிவிப்புக்களைக் கவனத்தில் கொள்ள வேண்டாம் என்று அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஆளுங்கட்சியின் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துள்ளனர் என்று அறியமுடிகின்றது.

ஆட்சிக்கு வந்தவுடன் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக அரசு குறிப்பிட்டது. ஆனால் ஒன்றரை ஆண்டுகள் நிறைவடைந்துள்ள போதிலும் மாகாண சபைத் தேர்தல் குறித்து முன்னேற்றகரமான எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை.

மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் படுதோல்விடைவோம் என்பதை அரசு நன்கு அறியும். அதனால் தேர்தலை நடத்தாது. அரசின் வாக்கு வங்கி 20 சதவீதமளவுக்குக் குறைவடைந்துள்ளது." – என்றார்.

## பரபரப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் சமூகச் சூழ்நிலையில், இந்த அமர்வு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடத் தயாராக இருப்பதாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதேபோல், அபிவிருத்தி அதிகாரிகளும் தங்களது கோரிக்கைகளை முன் வைத்து போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இவை தொடர்பில் நாடாளுமன்றத்தில் கடும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாளை 4 ஆம் திகதி இலங்கையின் சுதந்திரதினமாகக்கொண்டாடப்படுவதால், நாளை நாடாளுமன்ற அமர்வு நடைபெறாது. அதனைத் தொடர்ந்து 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெறவுள்ளன.

அதேவேளை, அரசமைப்பு பேரவையும் இன்று கூடவுள்ளது. புதிய கணக்காய்வாளர் நாயகம் தொடர்பில் இதன்போது இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.






# பலாங்கொடை கஸ்ஸப்ப தேரர் உள்ளிட்ட 10 பேருக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை காணி விவகாரத்துடன் தொடர்புடைய பலாங்கொடை கஸ்ஸப்ப தேரர் உள்ளிட்ட 10 பேரும் எதிர்வரும் 09 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கரையோர பாதுகாப்பு சட்டத்தை மீறியமை மற்றும் அத்துமீறிய கட்டுமானம் ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு திருகோணமலை நீதவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை கோட்டை வீதியில் உள்ள ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி போதிராஜ விகாரைக்கு சொந்தமானதென கூறப்படும் காணியில் வைக்கப்பட்டிருந்த புத்தர் சிலையை பொலிஸார் அகற்றுவதற்கு முயற்சிப்பதாகக் கூறி நவம்பர் 16 ஆம் திகதி பலாங்கொடை கஸ்ஸப்ப தேரர் உள்ளிட்ட குழுவினர் எதிர்ப்பில் ஈடுபட்டனர்.எனினும் சம்பந்தப்பட்ட காணியில் கடற்கரைக்கு அருகில் உணவகமொன்று அமைக்கப்பட்டிருப்பது பின்னர் தெரியவந்தது.

கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தினர் உணவகத்தை அகற்றுவதற்கு முயற்சித்தமையே எதிர்ப்பிற்கான பிரதான காரணம் என்பது பின்னர் உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் கரையோரப் பாதுகாப்பு சட்டத்தை மீறியதற்காகவும் அத்துமீறிய கட்டுமானத்திற்காகவும் 11 சந்தேகநபர்கள் பெயரிடப்பட்டு திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் விடயங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பலாங்கொடை கஸ்ஸப்ப தேரர், ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி போதிராஜ விகாரையின் விகாராதிபதி திருகோணமலை கல்யாணவங்சதிஸ்ஸ தேரர் உள்ளிட்ட 04 தேரர்கள் நேற்று விளக்கமறியலில் வைக்கப்பட்ட சந்தேகநபர்களில் உள்ளடங்குகின்றனர்.

---

# வடக்கு மீனவர்களின் வலையை அழித்து அத்துமீறிய இந்திய இழுவைப்படகுகள்

## நா. வர்ணகுலசிங்கம் குற்றச்சாட்டு

“நயினாதீவு கடற்பகுதியில் கரையில் இருந்து இரண்டு -மூன்று கிலோ மீற்றர் தொலைவில் எங்களது மீனவர்கள் தொழில் செய்துகொண்டிருக்கும் போது இந்திய இழுவைப்படகுகள் அத்துமீறி வந்து வலைகளை அறுத்தும் மீன்பிடி உபகரணங்களை அழித்துள்ளன.“"

– இவ்வாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச உப தலைவர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நயினாதீவு கடற்பகுதியில் கரையில் இருந்து இரண்டு -மூன்று கிலோ மீற்றர் தொலைவில் எங்களது மீனவர்கள் தொழில் செய்துகொண்டிருக்கும் போது இந்திய இழுவைப்படகுகள் அத்துமீறி வந்து வலைகளை அறுத்தும் மீன்பிடி உபகரணங்களை அழித்துள்ளன. இதனையடுத்து பாதிக்கப்பட்ட எமது மீனவர்கள் அருகேசென்று நியாயம் கேட்டபோது கற்களை கொண்டு இந்திய மீனவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் நான்கு மீனவர்கள் பலத்த காயங்களுக்கு உள்ளாகி மருத்துவமனையில்



சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எங்கள் கடல்வளத்தையும் அழித்து வாழ்வாதாரத்தையும் அழத்து தொழில் உபகரணங்களையும் அழித்ததுடன், கற்கள் கொண்டு எங்கள் மீனவர்களை தாக்கி படுகாயங்களுக்கு உள்ளாக்கியுள்ளமை இந்திய இழுவைமடி மீனவர்களது அரக்கத்தனமான செயற்பாடாகும். ஒரு மீனவர் தலையில் காயமேற்பட்டு மிக மோசமான நிலையில் உள்ளார்.

கடந்த 31 ஆம் திகதி இரவு நடைபெற்ற நிலையில் இதுவரை இலங்கை அரசாங்கமோ, சம்பந்தப்பட்ட அமைச்சரோ, அரசியல் கட்சிகளோ வாய்திறக்காதுள்ளனர். கடற்றொழில் அமைச்சர் கடற்றொழில் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பில் எதுவும் கதைப்பதும் இல்லை. செயற்படுவதும் இல்லை. ஆனால் நாடாளுமன்றத்தில் யார் எதைக்கதைச்சாலும் அதற்கு பதில் சொல்லிக்கொண்டு இருக்கிறார்.

எங்கள் கரை வரைக்கும் அத்துமீறி வந்து அழித்ததும் இல்லாமல் அதை கேட்கப் போன எங்கள் மீனவர்கள் மீது அரக்கத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டு நான்கு பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில் இதுவரை ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த அரக்கத்தனமான செயற்பாட்டை எமது மீனலர்கள் சார்பில் வன்மையான கண்டனத்தை பதிவு செய்கின்றோம். இந்த பிரச்சினை உடனடியாக முடிவுக்கு கொண்டுவரப்படாவிட்டால் கடலில் இரு தரப்பு மீனவர்களிடையே போர் வெடிக்கும் அபாயம் உள்ளது. இரு தரப்பு மீனவர்களுக்கு இடையிலான மோதல் ஏற்பட்டு உயிர்ச்சேதங்கள் ஏற்படுவதற்கு முன்னதாக விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில இருந்துதான் இழுவை படகுகள் எங்கள் கடல் எல்லைக்குள்ள வந்து அத்துமீறி அநியாயங்களை செய்கின்றார்கள். அதனை தடுத்து நிறுத்த வக்கற்ற தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மோடிக்கு கடிதம் எழுதுவது ஏமாற்று நாடகம். இது தமிழ்நாட்டு பிரச்சினை. அதனை கட்டுப்படுத்த முடியாவிட்டால் எதற்கு முதலமைச்சர் பதவி.” – என்றார் .

# ரணில் - நாமல் ஒன்றிணைவு பேச்சு பொய்!



## மொட்டுக் கட்சி மறுப்பு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றிணையவுள்ளன என வெளியாகும் தகவலை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி நிராகரித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இரு தரப்பு இணைவு தொடர்பில் மொட்டு கட்சியின் செயலாளர் சாகர காரியவசத்திடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி என்பவற்றுக்கிடையில் கொள்கை வேறுபாடுகள் உள்ளன.

எனவே, கொள்கையை ஏற்கும் எந்தத் தரப்பாக இருந்தாலும் இணைந்து செயற்படலாம். கொள்கையை ஏற்க மறுப்பவர்களுடன் கூட்டணி கிடையாது."

– என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பவற்றை ஒன்றிணைக்கும் முயற்சி தோல்வி அடையும் பட்சத்தில், நாமல் தரப்புடன், ரணில் அணி இணைந்து செயற்படும் எனத் தகவல் வெளியான நிலையிலேயே அது தற்போது மறுக்கப்பட்டுள்ளது.

---

### எயார்பஸ் ஊழல் வழக்கு:

# சமல் ராஜபக்ஷவின் புதல்வர் சமிந்திரவை சந்தேகநபராக பெயரிட்டது நீதிமன்றம்

சர்ச்சைக்குரிய எயார்பஸ் விமான கொள்வனவின் போது இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல் தொடர்பான வழக்கில், முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் இளைய புதல்வரான சமிந்திர ராஜபக்ஷவை மூன்றாவது சந்தேகநபராக கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று பெயரிட்டுள்ளது.

இந்தநிலையில், தற்போது அமெரிக்காவில் வசித்து வரும் இவரை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த கால அரசாங்கத்தின் போது ரஷ்யாவிடமிருந்து போர் விமானங்களைக் கொள்வனவு செய்ததில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பல மில்லியன் டொலர் நிதி மோசடி தொடர்பில் இந்த விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.



ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் நிறுவனத்திற்கு 10 எயார் பஸ் விமானங்களைக் கொள்வனவு செய்யும் ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, பிரான்ஸைத் தளமாகக் கொண்ட எயார் பஸ் நிறுவனம் சுமார் 16.84 மில்லியன் அமெரிக்க டொலர்களை லஞ்சமாக வழங்க இணங்கியமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற இந்த ஊழலில், ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன மற்றும் அவரது மனைவி பிரியங்கா விஜேநாயக்க ஆகியோர் முக்கிய குற்றவாளிகளாக இனங்காணப்பட்டனர்.

இதேவேளை, சமல் ராஜபக்ஷவின் முத்த புதல்வரும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்ட நிலையில், அண்மையில் பிணையில் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

---




# வெலிகம பிரதேச சபை தவிசாளராக சட்டத்தரணி சிந்தக தர்ஷன தெரிவு

வெலிகம பிரதேச சபையின் தவிசாளராக தேசிய மக்கள் சக்தியின் சட்டத்தரணி சிந்தக தர்ஷன ஹேவாபதிரண தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆதரவாக 22 வாக்குகளை பெற்ற அவருக்கு எதிராக 21 வாக்குகள் அளிக்கப்பட்டன. 02 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன.

வெலிகம பிரதேச சபையின் புதிய தவிசாளரை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு இரு சந்தர்ப்பங்களில் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

கோரம் இன்மையால் வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்பட்டது.

வெலிகம பிரதேச சபையின் தவிசாளராக செயற்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் லசந்த விக்கிரமசேகர, 04 மாதங்களுக்கு முன்பு துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டதை அடுத்து அந்த பதவி வெற்றிடமாகியிருந்தது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# லாயக்கற்ற தலைமைகள்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை உடனடியாக ரத்து செய்யும்படி வலியுறுத்தியுள்ள இலங்கை திருச்சபையின் ஆயர்கள் (The Bishops of the Church of Ceylon) பயங்கரவாதத்திலிருந்து நாட்டைப் பாதுகாக்கும் சட்ட மூலத்தை உடனடியாக திரும்பப் பெறுமாறும் வலியுறுத்தியுள்ளனர்.

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு பதிலாக புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கை குறித்து அவர்கள் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளனர்.

இருக்கின்ற மோசமான சட்டத்துக்கு மாற்றாக வேறு ஒரு பெயரில் மற்றொரு கொடூரமான சட்டத்தைக் கொண்டு வருவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை தங்களை ஆழ்ந்த மன உளைச்சலுக்கு ஆளாக்கி உள்ளதாக அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குதல் என்ற பெயரில் 2018 இல் 'பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்' (CTA) என்ற பெயரிலும், 2023 இல் 'பயங்கரவாதத் தடைச் சட்ட மூலம்' (ATA) என்ற பெயரிலும், இரண்டு முந்தைய முயற்சிகள் எடுக்கப்பட்டு அவை தோல்வியில் முடிவடைந்திருந்தன. அவற்றை ஒத்ததாக இப்போது இந்த அரசும் அதுபோன்ற ஒரு மாற்றீட்டுச் சட்டத்தை முன் வைத்திருப்பது குறித்து இலங்கை திருச்சபை ஆயர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கடந்த 48 ஆண்டுகளாக நீடிக்கும் மிக மோசமான - மிகக் கொடூரமான - காட்டுமிராண்டித்தனமான - மிலேச்சத்தனமான - பயங்கரவாத தடுப்புச் சட்டத்தைத் தொடர்ந்து நடைமுறையில் வைத்திருப்பதற்காக பாதுகாப்பு தரப்பினர் நடத்தும் சதி நாடகமே அந்தச் சட்டத்துக்கு மாற்றீடான சட்டம் என்ற பெயரில் இன்னும் ஒரு மோசமான சட்டமூலத்தை முன் வைப்பதாகும் என்று உண்மை நிலைமையை அம்பலப்படுத்தியிருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன்.

பாதுகாப்புத் தரப்பினர் தங்களின் அதிகாரமும் அட்டூழியமும் அடாவடித்தனமும் தொடர்ந்து கோலோச்சுவதற்கு தற்போதைய பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீடிப்பது தங்களுக்கு அவசியம் என்று கருதுகிறார்கள் என்பதை சுமந்திரன் வெளிப்படுத்துகிறார்.

அரச பயங்கரவாதத்தின் ஊற்றுக்கண்ணாகவே இப்போது பயங்கரவாத தடுப்புச் சட்டம் நிலை பெற்றிருப்பது யாவரும் அறிந்த விடயம்தான்.

ஆட்சியாளர்கள் அந்தச் சட்டத்தை நீக்க விரும்பினாலும், பாதுகாப்பு தரப்பினரை மீறி அந்த அரசியல் முடிவை நடைமுறைப்படுத்த லாயக்கற்றவர்களாக அவர்கள் இருக்கிறார்கள் என்ற உண்மையை சுமந்திரன் வெளிப்படுத்துகிறார்.

அதனால் மாற்றீட்டுச் சட்டம் என்ற பெயரில் பாதுகாப்புத் தரப்பினரின் வலியுறுத்தலில் முன் வைக்கப்படும் மேலும் மோசமான சட்டமூலங்கள் வாயிலாகக் காலம் இழுத்தடிக்கப்படுகின்றது. இருக்கின்ற இந்தச் சட்டத்தை நீக்குவதற்கான வலியுறுத்தல் ஒவ்வொரு தடவை வரும்போதும், மாற்றீட்டுச் சட்டம் ஒன்றை விவாதத்திற்கு முன் வைத்து, காலத்தை இழுத்தடித்து, இருக்கின்ற சட்டத்தை நீடிக்கச் செய்கின்ற தந்திரம் பாதுகாப்பு தரப்பினரின் சதித் திட்டமாக முன்னெடுக்கப்படுகின்றது.

பாதுகாப்பு தரப்பினரை மிஞ்சித் தங்களது அரசியல் முடிவுகளை நடைமுறைப்படுத்த இயலாத அரசியல் தலைமைகள், பாதுகாப்பு தரப்பினரின் நெருக்குவாரத்துக்குள் சிக்குண்டு, நடைமுறையில் இருக்கின்ற பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்க முடியாதவர்களாக அல்லற்படுகிறார்கள். அதுவே இப்போதும் யதார்த்தத்தில் இடம் பெற்றுக் கொண்டிருப்பதாக சுமந்திரன் சுட்டிக்காட்டுவது முற்றிலும் உண்மைதான்.




# கிவுல் ஓயா திட்டத்திற்கு எதிரான மக்கள் போராட்டம் தமிழர்களின் சரித்திரத்தில் மிக முக்கிய திருப்புமுனை

## நேற்றைய போராட்ட முடிவில் சுமந்திரன் தெரிவிப்பு

**(கி.வசந்தன்)**

கிவுல் ஓயாத் திட்டத்திற்கு எதிரான போராட்டம் தமிழ் மக்களுடைய சரித்திரத்தில் மிக முக்கியமான திருப்பு முனையான போராட்டமாக அமைந்துள்ளது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற கிவுல் ஓயாத் திட்டத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் மக்களுடைய சரித்திரத்தில் மிக முக்கியமான ஒரு திருப்பு முனையான போராட்டமாக இது அமைகிறது. ஏனென்றால், இனப்பரம்பலை மாற்றுகின்ற இந்தத் திட்டம், பல தசாப்தங்களுக்கு முன்னராகவே தயாரிக்கப்பட்டது. அது இப்பொழுது நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகிறது. அமைச்சரவை அங்கீகாரம் கடந்த திங்கட்கிழமை கொடுக்கப்பட்டிருக்கிறது.

பல தசாப்தங்களுக்கு முன்னர், நீண்ட காலமாக வடக்கிலும் கிழக்கிலும் இனப்பரம்பலை மாற்றுகின்ற திட்டம், அவை ஒவ்வொரு திட்டங்களின் மூலமாக அமல்படுத்தப்பட்டிருப்பது எங்களுக்குத் தெரியும். கல்லோயா திட்டத்தில் இருந்து விசேடமாக கிழக்கின் இனப்பரம்பல் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அப்படியாகவே நகர்ந்து வந்து முல்லைத் தீவு மாவட்டம், வவுனியா வடக்கு போன்ற பிரதேசங்களிலும் இனப்பரம்பலை மாற்றுகின்ற திட்டம் அமுலில் இருக்கிறது.

எங்களுக்கு ஏற்கனவே தெரியும், மணலாறு வெலியோயாவாக மாறி விட்டது. இப்படியாகப் பல இடங்கள் முழுக்க மாற்றப்பட்டிருக்கின்றன. இந்த கிவுல் ஓயாத் திட்டம் என்பது பாரியதொரு வேலைத் திட்டத்தினுடைய ஒரு பகுதி. இது கைவிடப்பட்ட திட்டமாக இருந்தாலும் கூட, இப்பொழுது மீண்டும் அதற்கு உயிர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அமைச்சரவை அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த வருடத்துக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. போதிய அளவு பணத்தை இதற்காக அவர்கள் செலவு செய்ய இருக்கிறார்கள்.

தமிழ்ப் பிரதேசம் முழுவதையும் நீருக்குள்ளே அமுத்தி, அதில் இருந்து வருகின்ற நீர்ப்பாசனத்தின் மூலமாக ஏற்கனவே குடியேற்றம் செய்யப்பட்ட சிங்கள பிரதேசங்களுக்கு இந்த நீர்ப்பாசனத் தண்ணீரைக் கொடுப்பதற்கான திட்டம். அதிலும் விசேடமாக இந்தத் திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, புதிய குடியிருப்பாளர்களையும் கொண்டு வந்து அங்கே அமர்த்துவார்கள் என்று. இப்பொழுது இருக்கிற அந்தப் பிரதேசங்களில் தமிழ் மக்களைக் குடியேற்ற முடியாது. ஏனென்றால் அங்கே ஏற்கனவே நூறு வீதமாக சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டிருக்கிறார்கள். எப்படியெப்படியெல்லாம் கொண்டு வந்து குடியேற்றினார்கள் என்று எங்களுக்குத் தெரியும்.

தமிழ் மக்களை இந்த வேளையிலே கொண்டு போய் அங்கே குடியேற்றுவது என்பது முற்று முழுதும் அசாத்தியமான ஒரு விடயம். ஆகையினாலே இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவது என்பது நீண்ட காலமாக, பல்வேறு அரசாங்கங்கள் மாறி மாறி வந்த போது கொண்டு வரப்பட்ட திட்டத்தின் நீட்சியாகத்தான் காணப்படுகிறது.

இந்த அரசாங்கம் மிகத் தெளிவாக ஒரு வாக்குறுதியைக் கொடுத்திருந்தது. அதாவது இனப்பரம்பலை மாற்றுகிற எந்த அபிவிருத்தித் திட்டத்தையும் நாங்கள் அமுல்படுத்த மாட்டோம் என்பதை எழுத்திலே தெளிவாகச் சொல்லியிருக்கிற இந்த அரசாங்கம்தான், இப்பொழுது அதற்கு உத்தியோகபூர்வ அனுமதியைக் கொடுத்து அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த இருக்கிறார்கள்.

ஆனபடியினால்தான் இது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வு. ஒன்றாகச் சேர்ந்து தமிழ் மக்கள் அனைவரும், எந்தவித கட்சி பேதமும் இல்லாமல், கட்சிகளைச் சேராதவர்களும், அரசியலிலே இல்லாதவர்களும் அனைவருமாகச் சேர்ந்து வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் எங்களுடைய பூர்வீகத்தைப் பாதுகாக்கின்ற இந்த நிகழ்ச்சியிலே இன்றைக்கு ஒன்று சேர்ந்திருக்கிறோம். இந்தச் செய்தியைத்தான் நாங்கள் இப்பொழுது அரசாங்கத்திற்கு எழுத்து மூலமாக அறிவிக்க இருக்கிறோம். - எனத் தெரிவித்தார்.

# கிவுல் ஓயா நீர்த் தேக்கத் திட்டத்தை முன்னெடுத்தால் தமிழர்களின் 47 தொல்லியல் இடங்கள் அழிக்கப்படும்

## யாழ் நூலக எரிப்பின் தொடர்ச்சியே இது என்கிறார் ரவிகரன் எம்.பி.



**(விஜயரத்தினம் சரவணன்)**

கிவுல் ஓயாத் திட்டத்தைச் செயற்படுத்தினால் தமிழர்களுடைய வரலாற்றைப் பறைசாற்றும் 47தொல்லியல் இடங்கள் அழிக்கப்படும் என சுட்டிக்காட்டிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கடந்தகால அரசு யாப்பாணம் நூலகத்தை எரித்து எவ்வாறு தமிழர்களின் வரலாற்று ஆதாரங்களை அழித்தார்களோ, அதேபோல தற்போதைய அரசு கிவுல் ஓயாத் திட்டத்தைச் செயற்படுத்தி தமிழர்களின் வரலாற்றைப் பறைசாற்றும் 47தொல்லியல் இடங்களை அழிப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எனவே யாழ் நூலக எரிப்பின் தொடர்சியாகவே இந்த கிவுல் ஓயாத் திட்டத்தினை தாம் பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கிவுல் ஓயாத் திட்டத்திற்கு எதிராக நேற்று நெடுங்கேணியில் இடம்பெற்ற ஆரப்பாட்ட பேரணியில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இப்படிக் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

மணலாறு என்பது தமிழர்களின் இதய பூமியாகும். அத்தகைய தமிழர்களின் இதயபூமியான மணலாற்றில் மகாவலி அதிகாரசபையினால் திட்டமிட்ட வகையில் சிங்களக்குடியேற்றம் மேற்கொளளப்பட்டுள்ளதுடன், வெலிஓயா எனஒ பெயரும் மாற்றப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக தற்போது மகாவலி (எல்)வலயத்தின் கிவுல் ஓயாத் திட்டத்தினூடாக வவுனியா வடக்கு மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள தமிழர்களின் பூர்வீக கிராமங்கள், வயல் நிலங்கள், களங்கள் என்பன ஆக்கிரமிக்கப்பட்டு இனப்பரம்பல் கோலத்தை மாற்றியமைக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

குறிப்பாக ஏற்கனவே குடியேற்றப்பட்ட 4,372 பெரும்பான்மையினக் குடும்பங்களும், குடியேற்றப்படவுள்ள 1,626 பெரும்பான்மையினக் குடும்பங்களுமாக மொத்தம் 6,000 பெரும்பான்மையினக் குடும்பங்களே இந்தக் கிவுல் ஓயாத் திட்டத்தினூடாக பயனடையவுள்ளன எனக் கிவுல் ஓயாத் திட்ட அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே இத்திட்டத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு எவ்வித பயன்களுமில்லை. தமிழ் மக்களுடைய பூர்வீக மணலாற்றை ஆக்கிரமித்து குடியேற்றப்பட்டுள்ள மற்றும் குடியேற்றப்படவுள்ள பெரும்பான்மை இனத்தவர்களை பொருளாதார ரீதியாக வளப்படுத்துவதற்காகவே இத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

தமிழ் மக்களின் பூர்வீக மணலாற்றை ஆக்கிரமித்துள்ளமையோடு நின்றுவிடாமல் அங்கு குடியேற்றப்பட்ட மற்றும் குடியேற்றப்படவிருக்கின்ற – எவ்வித நிலத்தொடர்புமற்ற – பெரும்பான்மையினத்தவர்களை வலுப்படுத்துவதற்கான நோக்கத்தை மாத்திரம் கருத்திற்கொண்டே இந்தக் கிவுல் ஓயாத் திட்டத்தை செயற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு சிங்களக்குடியேற்றங்களை அதிகளவில் மேற்கொண்டு, அவ்வான குடியேற்றவாசிகளை எமது பகுதிகளில் தொடர்ந்து நிலைகொள்ளச் செய்வதற்காக இவ்வாறான திட்டங்களை மேற்கொள்வதன்மூலம் இனப்பரம்பல் கோலத்தை மாற்றியமைக்க முயலகின்றார்கள். அதாவது எமது பூர்வீக நிலங்களில் எம்மை சிறுபான்மையினராக ஆக்குவதற்கு முயற்சிக்கின்றார்கள் .

அத்தோடு குறித்த கிவுல் ஓயாத் திட்டத்தைச் செயற்பாடுத்தினால் வவுனியா வடக்கில் இருக்கின்ற தமிழ் மக்களின் பூர்வீக இராமன்குளம், கொட்டோடைக் குளம், ஓயாமடுக்குளம், வெள்ளான் குளம், பெரியகட்டுக்குளம், பனிக்கல் மடுக்குளம், சன்னமுற்றமடுக்குளம், கம்மாஞ்சிக்குளம், குறிஞ்சாக்குளம், புலிக்குட்டிக்குளம், திரிவைச்சகுளம் முதலான சிறியநீர்ப்பாசனக்குளங்களும், அவற்றின் கீழான வயல்காணிகளும், வெடிவைச்சகல்லு குளத்தின்கீழ் வரும் வயல்காணிகள் பகுதியளவிலும், நாவலர்பாம், கல்லாற்றுக்குளம், ஈச்சன் குளம், கூழாங்குளம் வயற்காணிகளும், வவுனியா வடக்கிலுள்ள பழந்தமிழ் கிராமங்களான காட்டுப்பூவரசங்குளம் கிராமம், காஞ்சூரமோட்டை கிராமம், மருதோடைக் கிராமத்தின் ஒரு பகுதி போன்ற தமிழ் மக்களின் பூர்வீக குளங்களும், வயல்நிலங்களும், கிராமங்களும் நீரேந்துப்பகுதிகளுக்குள் மூழ்கிப்போகும் நிலை ஏற்படும்.

எனவதான் தமிழ் மக்களின் பூர்வீகப் பகுதிகளை ஆக்கிரமித்து மேற்கொள்ளப்படும் இவ்வாறான திட்டங்களை கடுமையாக எதிர்க்கின்றோம். அரசினால் மேற்கொள்ளப்படும் இத்தகைய செயற்பாடுகளை மிகமோசமான, கீழ்த்தரமான செயற்பாடுகளாகவே காண்கின்றோம்.

மேலும் இந்தக் கிவுல் ஓயாத் திட்டத்தினை செயற்படுத்தினால், அந்த இடங்களிலுள்ள தமிழர்களின் வரலாற்றுத் தொன்மையைப் பறைசாற்றும் 47தொல்லியல் இடங்களில் பெருமளவானவை நீரில் மூழ்குவதுடன், அழித்தொழிக்கப்படும்.

குறிப்பாக ஈழத்தில் தமிழர்களின் வரலாற்று தொன்மைகளையும், ஈழத்திற்கும் தமிழர்களுக்குமிடையிலான வரலாற்றுத் தொடர்புகளையும் இல்லாமல் செய்வற்காக கடந்தகால பேரினவாத அரசாங்கமானது தமிழர்களின் வரலாற்று நூலாதாரங்களால் நிறைந்திருந்த யாழ்ப்பாணம் நூலகத்தினை எரியூட்டினார்கள்.

அதேபோல தற்போதைய இந்த அரசு கிவுல் ஓயாத் திட்டத்தைச் செயற்படுத்தி தமிழர்களின் வரலாற்றுத் தொன்மைகளைப் பறைசாற்றும் இந்த 47தொல்லியல் இடங்களையும் அழிப்பதன் மூலமாக வன்னிக்கும் தமிழர்களுக்குமிடையிலான நீண்டகாலாவரலாற்றுத் தொடர்பை அழிக்க முயலகின்றனர்.

எனவே நாம் எமது பூர்வீக நிலங்களைத் தக்கவைக்க வேண்டுமெனில் நாம் போராடியேயாகவேண்டும்.

அம்பாந்தோட்டையிலோ மாத்தறையிலோ காணிகளை பெறுவதற்காக நாம் இங்கு போராட்டத்தை மேற்கொள்ளவில்லை. எமது தமிழர்களின் பூர்வீக தமிழர் தாயகத்தில் இடம்பெறும் திட்டமிடப்பட்ட நில ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராகவே போராடுகின்றோம்.

இந்தக் கிவுல் ஓயாத் திட்டத்திற்காக பாரிய அளவில் அடர்வனங்களை அழிப்பதன்மூலம் எமக்கும் காட்டு யானைகளுக்கும் மோதல்களை உருவாக்கவும் முனைகின்றனர். இவ்வாறு காட்டு யானைகளுக்கும் எமக்கும் மோதல்களை ஏற்படுத்த முயலாதீர்கள். முடியுமானால் நீங்கள் வாருங்கள் மோதிப்பார்க்கலாம் – என்றார்.

# சுதந்திர தினத்தைக் கரிநாளாக அடையாளப்படுத்துகின்ற பல்கலை மாணவர்களுக்கு மல்லாவி வர்த்தகர்கள் ஆதரவு



இலங்கையின் சுதந்திர தினத்தைக் கரிநாளாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்த அழைப்புக்கு அமைவாக மல்லாவி வர்த்தக சங்கமும் வர்த்தக நிலையங்களை அன்றையதினம் பூட்டி ஆதரவு தெரிவிக்கும் என மல்லாவி வர்த்தக சங்கத்தின் தலைவர் விஜயகுமார் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த 29 ஆம் திகதியன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் இலங்கையின் சுதந்திர தினத்தை கரி நாளாக அடையாளப்படுத்தி போராட்டங்களை முன்னெடுக்க அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்பையும் கேட்டு நின்றனர்.

இந்த நிலையில் அந்த மாணவர்களின் கோரிக்கைக்கமைவாகவும், இலங்கையின் சுதந்திர தினத்தைக் கரிநாளாக ஏற்று எதிர்வரும் 4ஆம் திகதியன்று மல்லாவி வணிகர் மன்றத்தினராகிய நாம் எமது பகுதிகளுக்குட்பட்ட சகல வணிகர் மன்றங்களையும் பூட்டி யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கின்றோம். - என்று தெரிவித்தார்.



# சிவனடிபாத மலைக்குத் தரிசனத்துக்கு வந்த மூவர் குளவிக் கொட்டுக்கு இலக்கானார்கள்

**(மஸ்கெலியா விசேட நிருபர்)**

சிவனடிபாத மலைக்கு தரிசனம் செய்ய வந்த மூவர் நேற்று மதியம் குளவிக் கொட்டுக்கு இலக்காகினர்.

எம்பிலிபிட்டியவைச் சேர்ந்தவர்களான 20 வயதுடைய ஆண் ஒருவரும், 19 வயதுடைய பெண் ஒருவரும் மற்றும் வத்தேகெதரவைச் சேர்ந்த 29 வயது உடைய பெண் ஒருவருமே இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்காகினர்.

இவர்கள் மூவரும் நேற்றுத் திங்கட் கிழமை மதியம் சிவனடி பாத மலைக்குத் தரிசனம் செய்ய சென்ற வேளையில் குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் நல்லதண்ணி பொலிஸாரால் மீட்கப்பட்டு அம்புலன்ஸ் மூலம் மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலைக்குக் கொண்டு வரப்பட்டனர். அங்கு அவர்கள் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.






# ஆமை இறைச்சி, ஆமை முட்டைகளுடன் மூவர் மன்னார் நாச்சிக்குடாக் கடற்கரையில் சிக்கினர்

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் – யாழ்ப்பாணம் பிரதான வீதி, நாச்சிக்குடா கடற்கரைப் பகுதியில் இலங்கை கடற்படை நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது ஆமை இறைச்சி, ஆமை முட்டைகளுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மன்னார் நாச்சிக்குடாக் கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வடமத்திய கடற்படை கட்டளையைச் சேர்ந்த இலங்கைக் கடற்படை நடத்திய சிறப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகத்திற்கிடமான படகு ஒன்று சோதனை செய்யப்பட்டது.

அந்த நேரத்தில் சட்டவிரோத விற்பனைக்கு தயாராக இருந்த சுமார் 17 கிலோ ஆமை இறைச்சி மற்றும் 39 ஆமை முட்டைகள் மற்றும் ஒரு படகுடன் இந்த மூன்று சந்தேக நபர்களையும் கடற்படையினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 26 முதல் 32 வயது உடையவர்கள் என்றும், மன்னார், நாச்சிக்குடாப் பகுதியில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் கடற்படை தெரிவித்துள்ளது.

மேலும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை, ஆமை இறைச்சி, ஆமை முட்டைகள் மற்றும் படகு ஆகியவற்றுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கிளிநொச்சி வனவிலங்கு அலுவலகத்திடம் ஒப்படைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன எனக் கடற்படையின் செய்திகள் தெரிவிக்கின்றன.



# இந்தியா செல்லும் யோகா போட்டியாளர்கள் மட்டு. அரசாங்க அதிபருடன் நேற்று சந்திப்பு

**(வவுணதீவு நிருபர்)**

சர்வதேச ரீதியிலான யோகா போட்டி இந்தியாவில் நடைபெறவுள்ளது. இதில் பங்குபற்றுவதற்காக மட்டக்களப்பில் இருந்து செல்லவுள்ள குழு நேற்றுத் திங்கள் கிழமை பிற்பகல் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜைச் சந்தித்தனர்.

மட்டக்களப்பிலுள்ள ஐஸ்வரிய யோகா கலை மன்றம் மற்றும் ஐஸ்வரிய யோகா நிலையம் ஆகிய இரு அமைப்புக்களிலிருந்தும் இருபதுக்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் இந்தியாவின் பெங்களூரில் எதிர்வரும் 5 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரை நடை பெறவுள்ள சர்வதேச போட்டியில் பங்குபெறவுள்ளனர்.

இப் போட்டியில் கலந்து கொள்ளும் குழுவினர் யோகா பயிற்சி அமைப்புக்களின் தலைவர்களான ஏ.ஜெயகரன், எஸ்.சிறிதரன் ஆகியோரின் தலைமையில் இந்தியா செல்லவுள்ளனர்.

நேற்றைய சந்திப்பு நிகழ்வில், அரசாங்க அதிபர் போட்டியாளர்களுக்கு கைலாகு கொடுத்து தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.







# முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் தைப்பூச நிகழ்வு

(பா.சதீசன்)

இந்துக்களின் முக்கிய சமயச் சடங்குகளில் ஒன்றான தைப்பூச நிகழ்வு நேற்றையதினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) திருமதி மஞ்சுளாதேவி தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

முருகப்பெருமானுக்கு அனுஷ்டிக்கப்படும் விரதங்களில் முக்கியமான விரதமாக 'தைப்பூசம்' இந்துக்களின் சமயச் சடங்காக பண்பாட்டு விழுமியங்களுடன் நடைபெறுகின்றமை முக்கியமான அம்சமாகும்.

மும்மாரி பொழிந்து, வயல்நிலம் செழித்து, அறுவடையின் ஆரம்பமாக தைப்பூசத்தில் புதிர் எடுத்து அவற்றில் பொங்கல் பொங்கி வழிபடுகின்றமை தமிழர் தம் பாரம்பரியத்தின் மரபியல் நடைமுறையாகும். இந்த நெறிமுறையோடு நேற்றையதினம் தைப்பூச நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

மாவட்ட நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.ஜெயக்காந்த், மாவட்ட செயலகப் பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.













# மக்கள் வீடுகளை வாடகைக்கு விட அஞ்சுவர்: புதிய சட்டம் தொடர்பில் அலி சப்ரி எச்சரிக்கை

2025 ஆம் ஆண்டிற்கான குடியிருப்பாளர்கள் பாதுகாப்புச் சட்டமூலம் தற்போதைய வடிவில் நடைமுறைப்படுத்தப்பட்டால், அது இலங்கையின் வாடகைச் சந்தை மற்றும் பொருளாதாரத்தில் பாரிய சட்டச் சிக்கல்களை ஏற்படுத்தும் என முன்னாள் நீதியமைச்சர் அலி சப்ரி எச்சரித்துள்ளார்.

குடியிருப்பாளர்களைத் துன்புறுத்துவதைத் தடுப்பதும், சட்டவிரோத வெளியேற்றங்களைத் தவிர்ப்பதும் ஒரு பொது நோக்கமாகும் என்பதை ஏற்றுக்கொண்ட அலி சப்ரி, எனினும் இந்த வரைவுச் சட்டம் வாடகைச் சந்தையையும் நீண்ட கால அடிப்படையில் வாடகைக்கு இருப்பவர்களையுமே பாதிக்கும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை ஏற்கனவே 1972ஆம் ஆண்டின் வாடகைச் சட்டம் போன்ற கடுமையான சட்டங்களிலிருந்து விலகி, 2023ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க சட்டத்தின் மூலம் சமநிலையான ஒரு கட்டமைப்பை அடைந்துள்ள நிலையில், மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புவது ஆபத்தானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாடகைதாரர் ஒருவர் மாதாந்த வாடகை, நீர், மின்சாரக் கட்டணங்கள் அல்லது தொடர்மாடி நற்பணி கட்டணங்களைச் செலுத்தத் தவறினாலும், நீதிமன்ற நடவடிக்கைகள் முடியும் வரை அவர்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்க நில உரிமையாளர் கடமைப்பட்டுள்ளார்.

இது உரிமையாளரை வைத்து வாடகைதாரரை பலவந்தமாகப் பராமரிக்கச் செய்வதற்குச் சமமாகும் என அவர் விமர்சித்துள்ளார்.




கட்டணம் செலுத்தாதவர்களுக்குத் தடையற்ற சட்டப் பாதுகாப்பு வழங்குவது, சட்டத்தை தவறாகப் பயன்படுத்த ஊக்குவிக்கும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இச்சட்டம் காரணமாக நில உரிமையாளர்கள் தமது சொத்துக்களை வாடகைக்கு விட அச்சப்படுவார்கள். இதனால் வீடுகளுக்கான விநியோகம் குறைந்து, வாடகை விலைகள் அதிகரித்து, இறுதியில் வாடகைக்கு குடியிருப்பவர்களுக்கே பாதிப்பு ஏற்படும் என அவர் எச்சரித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க சட்டத்தின் மூலம் எட்டப்பட்ட முன்னேற்றத்தை இந்த புதிய சட்டமூலம் பின்னோக்கித் தள்ளுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய சட்டமொன்றைக் கொண்டு வருவதற்குப் பதிலாக, 2023ஆம் ஆண்டின் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என அவர் யோசனை தெரிவித்துள்ளார்.

அதில், கட்டணம் செலுத்தாதவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற கொள்கையின் அடிப்படையில் சட்டம் அமைய வேண்டும் என முன்னாள் நீதியமைச்சர் அலி சப்ரி வலியுறுத்தியுள்ளார்.

அதாவது, வாடகைதாரர் ஒருவர் தனது வாடகை மற்றும் இதர கட்டணங்களைச் சரியாகச் செலுத்தினால் மட்டுமே அவருக்கு சட்டப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்பதே அவரது கருத்தாகும்.

சீர்திருத்தம் என்ற பெயரில் நாடு மீண்டும் காலாவதியான சட்டங்களை நோக்கிச் செல்லக்கூடாது என அவர் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# கெஹெல்பத்தர பத்மேவுடன் தொடர்பு குறித்து முன்னாள் அமைச்சர்களிடம் தீவிர விசாரணை

திட்டமிட்ட குற்றக்கும்பல் உறுப்பினரான கெஹெல்பத்ர பத்மே என்பவருடன் தொடர்புகளைப் பேணியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து, முன்னாள் அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க மற்றும் சமல் ராஜபக்ஷ ஆகியோரிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நேற்று விசாரணைகளை நடத்தியுள்ளது.

ஆயுதக் கடத்தல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையவராகக் கருதப்படும் கெஹெல்பத்ர பத்மே, சர்வதேச பொலிஸில் உதவியுடன் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் இந்தோனேசியாவில் வைத்து கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அழைத்து வரப்பட்டார்.

அவருடன் அரசியல்வாதிகளுக்கு உள்ள தொடர்புகள் குறித்து தற்போது தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தனக்கு திட்டமிட்ட குற்றக்குழுக்களுடன் எந்தவித தொடர்பும் இல்லை எனத் தனது வாக்குமூலத்தில் மறுத்துள்ளார்.





எனினும், முன்னாள் அமைச்சர் சமல் ராஜபக்ச விசாரணைக்குப் பின்னர் ஊடகங்களுக்கு எவ்விதக் கருத்தையும் தெரிவிக்காமல் வெளியேறினார்.

தேவேளை, இவ்விவகாரம் தொடர்பாக வாக்குமூலம் வழங்குவதற்காக நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷ குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களுக்கும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தற்போது அழைப்பாணை விடுத்துள்ளது.

# சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவுக்கு எதிராக லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு

பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற முன்னாள் பிரதி பொதுச் செயலாளர் சமிந்த குலரத்ன, சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவுக்கு எதிராக நேற்று லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார்.

சபாநாயகருடன் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாகவே தான் பணி இடைநீக்கம் செய்யப்பட்டதாகவும், சபாநாயகரின் ஊழல் நடவடிக்கைகள் குறித்தும் இந்த முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளதாக சமிந்த குலரத்னவின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

இது குறித்துக் கருத்து தெரிவித்த சட்டத்தரணி மிதுன் டயஸ், தனது சேவை பெறுநர் இந்த முறைப்பாட்டை அரசாங்கத்திற்கு எதிராக அல்லாமல், சபாநாயகரின் ஊழல் நடவடிக்கைகளுக்கு எதிராகவே தாக்கல் செய்துள்ளதாகக் குறிப்பிட்டார்.



இந்த முறைப்பாடு குறித்து லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு பக்கச்சார்பற்ற விசாரணையை முன்னெடுக்கும் எனத் தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற பிரதி பொதுச்செயலாளர் சமிந்த குலரத்ன அண்மையில் நாடாளுமன்றத்தின் பணியாளர் ஆலோசனைக் குழுவினால் பணி இடைநீக்கம் செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சாதாரண தரப் பரீட்சை அனுமதி அட்டையில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அவகாசம்

2025 (2026) ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள தனியார் விண்ணப்பத்தாரர்கள், தமது அனுமதி அட்டைகளில் பிழைகள் இருப்பின் திருத்திக்கொள்வதற்கான கால அவகாசம் குறித்த அறிவிப்பை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் வெளியிட்டுள்ளார்.

தனியார் விண்ணப்பத்தாரர்கள் தமது அனுமதி அட்டைகளில் பெயர், பாடங்கள் அல்லது ஏதேனும் தகவல்களில் பிழைகள் இருப்பின், அவற்றை நேரடியாக இணையதளம் ஊடாகவே திருத்திக்கொள்ள முடியும்.

பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்துக்கு பிரவேசித்து அங்கு விண்ணப்பத்தாரரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளிடுவதன் மூலம் திருத்தங்களை மேற்கொள்ளலாம்.




இந்தத் திருத்தங்களை மேற்கொள்வதற்கு பெப்ரவரி 10 ஆம் திகதி நள்ளிரவு வரை மட்டுமே கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த காலக்கெடுவுக்குப் பின்னர், எக்காரணம் கொண்டும் மேலதிக அவகாசம் வழங்கப்பட மாட்டாது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

எனவே, விண்ணப்பத்தாரர்கள் தாமதமின்றித் தமது அனுமதி அட்டைகளைச் சரிபார்த்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

2025 (2026) ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுதந்திர தினத்தை முன்னிட்டு 49 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு

நாட்டின் 78 ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு, சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்து வரும் 49 கைதிகளுக்கு ஜனாதிபதியின் விசேட பொதுமன்னிப்பு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசியலமைப்பின் 34 ஆவது சரத்தின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள விசேட அதிகாரங்களுக்கு அமைய இந்த பொதுமன்னிப்பு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் திணைக்களம் வெளியிட்டுள்ள தகவல்களின்படி, இந்த பொதுமன்னிப்பு பின்வரும் அடிப்படையில் அமையவுள்ளது.

சிறு குற்றங்களுக்கு சிறையில் தண்டனை அனுபவித்து வரும் கைதிகள் பூர்த்தி செய்த ஒவ்வொரு வருடத்திற்கும்



ஒரு வாரம் என்ற அடிப்படையில் அவர்களது தண்டனை காலம் குறைக் கப்படும்.

அத்துடன், 75 ஆயிரம் ரூபாவுக்கும் குறைந்த அபராதத் தொகையை செலுத்த முடியாமல் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் கைதிகளின் எஞ்சிய தண்டனை காலம் முழுமையாக இரத்து செய்யப்படவுள்ளது.

அதற்கமைய, இந்த விசேட பொதுமன்னிப்பின் கீழ், தகுதியுள்ள கைதிகள் சுதந்திர தினமான நாளை விடுவிக்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.



# 2 பில்லியன் டொலரை கடந்த வாகன இறக்குமதிச் செலவு

2025ஆம் ஆண்டில் இலங்கையின் வாகன இறக்குமதிச் செலவு 2 பில்லியன் டொலரைக் கடந்துள்ளது. டிசம்பர் மாத தரவுகளுக்கு அமைய, இலங்கை மத்திய வங்கி இந்த விடயத்தை அறிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மாத்திரம் தனிப்பட்ட மற்றும் வணிக தேவைகளுக்காக 301 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வாகனங்கள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய, 2025ஆம் ஆண்டில் மொத்த வாகன இறக்குமதி செலவு 2.047 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான மொத்த வாகன இறக்குமதியில், தனிப்பட்ட பாவனைக்கான வாகன இறக்குமதிக்காக மாத்திரம் 1.6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

# அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ‘சுரக்ஷா’ காப்புறுதி நிவாரணம் வழங்க இணக்கம்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

நாட்டில் நிலவிய சீரற்ற வானிலை காரணமாக பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு, ‘சுரக்ஷா’ காப்புறுதி திட்டத்தின் கீழ் நிவாரணங்களை வழங்குவதற்கு இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் இணங்கியுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இயற்கை அனர்த்தங்கள் காரணமாக பாதிக்கப்பட்ட மாணவர்களிடமிருந்து 2025.11.26 முதல் 2025.12.31 வரையிலான காலப்பகுதியில் பெறப்பட்ட உரிமைகோரல்கள் மட்டுமே இதன்கீழ் பரிசீலிக்கப்படும் எனவும் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழங்கப்படும் நிவாரணங்கள் இயற்கை அனர்த்தம் காரணமாக பெற்றோர் அல்லது சட்டப்பூர்வ பாதுகாவலர்களை இழந்த மாணவர்களுக்கு, வருமான வரம்பை கருத்திற் கொள்ளாமல் நன்மைகள் வழங்கப்படும் (அனர்த்தத்தினால் மரணம் நிகழ்ந்ததை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் அவசியம்).

காப்புறுதி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாவிட்டாலும், அனர்த்தத்தின் காரணமாக ஏற்பட்ட விபத்துகளுக்காக பெறப்பட்ட வெளிக்கள சிகிச்சை, மருந்துகள் மற்றும் பரிசோதனைகளுக்காக அதிகபட்சம் 20,000.00 ரூபா வரை நன்மைகள் வழங்கப்படும்.

2025.11.01 முதல் 2025.11.26 வரை நிகழ்ந்த சம்பவங்களுக்கான காப்புறுதி கோரிக்கை ஆவணங்கள் அனர்த்தத்தினால் அழிவடைந்திருந்தால், அதிபர் மற்றும் கிராம உத்தியோகத்தரின் பரிந்துரையின் கீழ் நன்மைகள் வழங்கப்படும்.

தனியார் மருத்துவமனை பற்றுச்சீட்டுகள் தொலைந்திருந்தால், அந்த நிறுவனத்தால் சான்றளிக்கப்பட்ட நகல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அரசு மருத்துவமனை ஆவணங்கள் தொலைந்திருந்தால், நோயாளியின் விபரங்கள் அடங்கிய வைத்தியரின் பரிந்துரை கடிதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அனர்த்தத்தினால் ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறியவர்களுக்கு, தற்போதுள்ள 90 நாட்கள் கால அவகாசத்துடன் மேலதிகமாக 60 நாட்கள் சேர்க்கப்பட்டு, மொத்தம் 150 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படும் (2025.11.01 – 2025.12.31 காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்க வேண்டியவர்களுக்கு மட்டும்).

ஆவணங்களை சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டால், அதனை உறுதிப்படுத்த அதிபர் அல்லது கிராம உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தல் கடிதத்தை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சு வலியுறுத்தியுள்ளது.



# புத்தரின் புனித நினைவுச்சின்னங்கள் குஜராத்திலிருந்து நாளை வருகின்றன

## கொழும்பு கங்காராமயா விகாரையில் 11 ஆம் திகதி வரைத் தரிசிக்க வாய்ப்பு

இந்தியாவில் தற்போது வைக்கப்பட்டுள்ள புத்தரின் புனித தேவ்னிமோரி நினைவுச்சின்னங்கள் இலங்கையில் கண்காட்சிக்கும் தரிசனத்துக்கும் வைக்கப் படவுள்ளன.

புனித நினைவுச்சின்ன கண்காட்சி கொழும்பு கங்காராமயா விகாரையில் நாளை பெப்ரவரி 04 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை இந்தப் புனித சின்னங்கள் தரிசனத்துக்கு வைக்கப்படவுள்ளன.

குஜராத் ஆளுநர் ஸ்ரீ ஆச்சார்ய தேவ்விரத் மற்றும் குஜராத் துணை முதல்வர் ஸ்ரீ ஹர்ஷ் சங்கவி ஆகியோர் புனித நினைவுச் சின்னங்களை எடுத்து வரும் இந்தியக் குழுவிற்குத் தலைமை தாங்குவார்கள்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஏப்ரல் 2025 இல் இலங்கைக்கு விஜயம் செய்தபோது வெளிப் படுத்திய தொலைநோக்குப் பார்வையின் தொடர்ச் சியாக, இலங்கையில் புத்தரின் புனித தேவ்னிமோரி நினைவுச்சின்னங்களை காட்சிப்படுத்துவதன் மூலம் இந்தியா ஒரு ஆழமான ஆன்மீக தொடர்பு மற்றும் கலாசார ராஜதந்திர அணுகுமுறையை இங்கு மேற்கொள்ள உள்ளது.

தற்போது குஜராத்தின் பரோடா நகரில் வதோ தராவின் பரோடா மகாராஜா சயாஜிராவ் பல்கலைக் கழகத்தில் வைக்கப்பட்டுள்ள புனித நினைவுச் சின்னங்கள் கண்காட்சிக்காக நாளை கொழும்புக்குக் கொண்டு வரப்படுகின்றன. அவை 11 அன்று அவை திரும்பிக் கொண்டு செல்லப்படத் திட்டமிடப்பட் டுள்ளன. இந்தப் புனிதப் பயணம், புத்த மதத்தின் பிறப்பிடமாக இந்தியாவின் நீடித்த நாகரிகப் பொறுப்பை அடிக்கோடிட்டுக் காட்டும் அதே சமயம், இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான ஆழமான ஆன்மீக, கலாசார மற்றும் மக்களுக்கும் இடையிலான பிணைப்புகளை மீண்டும் உறுதிப்ப டுத்துகிறது.

குஜராத் ஆளுநர் ஸ்ரீ ஆச்சார்ய தேவ்விரத் மற்றும் குஜராத் துணை முதல்வர் ஸ்ரீ ஹர்ஷ் சங்கவி தலைமையிலான உயர்மட்ட இந்தியக் குழுவும், மூத்த துறவிகள் மற்றும் அதிகாரிகளும் புனித நினைவுச்சின்னங்களுடன் வருவார்கள்.

நிறுவப்பட்ட நெறிமுறை மற்றும் நினைவுச் சின்னங்களுக்கு வழங்கப்படும் புனிதத்தன்மைக்கு இணங்க, அவர்கள் இந்திய விமானப்படையின் சிறப்பு விமானத்தில் முழு அரசு மரியாதையுடன் பயணிப்பார்கள். இது இந்தியா தனது புனித பாரம்பரியத்தை நிலைநிறுத்தும் மரியாதையை பிரதிபலிக்கிறது என்று கூறப்பட்டது.

இந்தியாவின் பௌத்த மரபு மற்றும் அதன்

தொடர்ச்சி▼








# புத்தரின் புனித நினைவுச்சின்னங்கள் குஜராத்திலிருந்து நாளை வருகின்றன

## கொழும்பு கங்காராமயா விகாரையில் 11 ஆம் திகதி வரைத் தரிசிக்க வாய்ப்பு

தொடர்ச்சி▲

சமகால கலாசார ஈடுபாடுகளை எடுத்துக்காட்டும் கண்காட்சியின் முறையான தொடக்க விழா மற்றும் தொடர்புடைய கண்காட்சிகள் உட்பட கொழும்பில் நடைபெறும் சடங்கு, மத மற்றும் உத்தியோகபூர்வ நிகழ்வுகளில் பிரதிநிதிகள் குழு பங்கேற்கும்.

கொழும்பில் உள்ள மிகவும் பிரபலமான மற்றும் ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த பௌத்த நிறுவனங்களில் ஒன்றான கங்காராமய விகாரையில், புனித சின்னங்கள் பொதுமக்களின் வணக்கத்திற்காக வைக்கப்படும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வணக்கத்திற்குரிய ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கல நாயக்க தேரரால் நிறுவப்பட்ட இந்த விகாரை, வழிபாட்டு, கற்றல் மற்றும் கலாச்சார பரிமாற்றத்திற்கான ஒரு முக்கிய மையமாக பரிணமித்துள்ளது, மேலும் புனித நினைவுச் சின்னங்களின் தரிசனத்துக்கு பொருத்தமான மற்றும் கண்ணியமான சூழலை அது வழங்குகிறது. பௌத்த கலாசார நெறிமுறைகள், வரலாறு மற்றும் அன்றாட வாழ்க்கையை வடிவமைக்கும் ஒரு நாட்டில், இந்தத் தரிசனம் இலங்கை முழுவதும் உள்ள பக்தர்களுடன் ஆழமாக எதிரொலிக்கும் என்றும், இரு நாடுகளின் பகிரப்பட்ட பௌத்த பாரம்பரியத்தை மேலும் வலுப்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

குஜராத்தின் ஆரவல்லி மாவட்டத்தில் ஷாம்லாஜி அருகே அமைந்துள்ள தேவ்னிமோரி தொல்பொருள் தளத்திலிருந்து தேவ்னிமோரி நினைவுச்சின்னங்கள் மீட்கப்பட்டன. இது மகத்தான வரலாற்று மற்றும் ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். புகழ்பெற்ற தொல்பொருள் ஆராய்ச்சியாளர் பேராசிரியர் எஸ்.என். சௌத்ரி முதன் முதலில் 1957 இல் ஆராய்ந்த இந்த அகழ்வாராய்ச்சிகள், பொது சகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில் மேற்கு இந்தியாவில் புத்த மதம் செழித்ததற்கு சான்றாக நிற்கும் முக்கியமான புத்த கட்டமைப்புகள் மற்றும் நினைவுச்சின்னங்களை வெளிப்படுத்தின. இந்த நினைவுச்சின்னங்கள் விலைமதிப்பற்ற தொல்பொருள் புதையலை மட்டுமல்ல, புத்தரின் காலத்தால் அழியாத போதனைகளான அமைதி, இரக்கம் மற்றும் நல்லிணக்கத்தின் உயிருள்ள சின்னமாகவும் உள்ளன.







# தங்களை யார் எதிர்த்து நின்றாலும் கொந்தளிப்பதே தி.மு.கவின் வேலை

## த.வெ.க. ஆண்டு விழாவில் விஜய் உரை

அரசியலில் தங்களை யார் எதிர்த்து நின்றாலும் கொந்தளிப்பதே தி.மு.கவின் வேலை என்று த.வெ.க 3 ஆம் ஆண்டு தொடக்க விழாவில் அக்கட்சியின் தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

த.வெ.க. ஆரம்பித்து 2 ஆண்டுகள் நிறைவு பெற்று, மூன்றாம் ஆண்டு தொடங்கும் நிலையில், சென்னை பனையூரில் உள்ள அக்கட்சியின் தலைமை நிலையத்தில் 3 ஆம் ஆண்டு தொடக்க விழா நடந்தது. முன்னதாக கட்சி வளாகத்தில் கட்சிக் கொடியை ஏற்றிவைத்த விஜய், த.வெ.க. கொள்கைத் தலைவர்களின் சிலைகளுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து விஜய் த.வெ.கவினர் மத்தியில் அவர் உரையாற்றுகையில்,

காமராஜர், எம்.ஜி.ஆர், அண்ணா இருந்த இடத்தில் இப்போது இவர்களும் இருக்கிறார்களே என்று தமிழக மக்கள் தி.மு.கவைப் பார்த்து கண்ணீர் வடிக்கின்றனர்.

தமிழகத்தில் புதிதாக யார் அரசியலுக்கு வந்தாலும் தி.மு.க அவர்களைப் பார்த்து உங்களுக்கு என்ன அனுபவம் இருக்கிறது? என்று கேள்வி கேட்கும்.

எம்.ஜி.ஆருக்கு அரசியல் அரிச்சுவடி தெரியுமா? என்று கேள்வி எழுப்பினர். காமராஜருக்கு இலக்கியம் தெரியுமா? என்று கொந்தளித்தனர். இன்று நம்மைப் பார்த்துக் கொந்தளிக்கின்றனர். அரசியலில் யார் அவர்களை எதிர்த்து நின்றாலும் கொந்தளிப்பதே திமுகவின் வேலை.

இத்தனையையும் மீறி தமிழகத்தில் மிகப்பெரிய கட்சியாக தவெக இன்று வளர்ந்திருக்கிறது. அதனால், டெக்னாலஜி வளர்ந்திருக்கும் சூழலில் விமர்சனங்களில் உங்கள் (தி.மு.க) டெக்னிக்கையாவது மாற்றுங்கள்.

அதைவிடுத்து 50 வருடங்களுக்கு முந்தைய தகர டப்பாவை எடுத்து உருட்டுகிறார்கள். 'பவள விழா பாப்பாவுக்கு' வேறென்ன தெரியும். பழைய டப்பாவை உருட்டத்தானே தெரியும்.

ஆனால், அதற்காக எல்லாம் அவர்கள் செய்யும் தவறுகளை, ஊழல்களை சொல்லிக் காட்டாமல் இருக்க முடியாது. மக்களுடைய ஒரே பிரதிநிதி த.வெ.க. மட்டும்தான். தி.மு.கவை தொடர்ந்து நாம் விமர்சனம் செய்வோம்.

தமிழக தேர்தல் களத்தில் மும்முனைப் போட்டி, நான்குமுனை போட்டி என்றெல்லாம் சொல்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்கிறேன். இங்கே மாபெரும் மக்கள் சக்தி கூட்டணி, தி.மு.க. கூட்டணி, பா.ஜ.க. தலைமையில் மற்றும் பலர் கூட்டணி தான் இருக்கிறது. இதில், தி.மு.கவை வீழ்த்த மாபெரும் மக்கள் சக்தியான த.வெ.கவால் மட்டும் தான் முடியும்.

'ஏய் விஜய், வீட்டைவிட்டு வெளியில் வா...' என்று சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள். கொஞ்சம் பொறுமையாக இருங்கள். தேர்தல் திகதியில் தமிழகத்தின் ஒவ்வொரு வீட்டில் இருக்கும் ஒவ்வொரு விஜய்யும் வாக்காளர் அடையாள அட்டையுடன் காலையிலேயே பூத் பூத்தாக வந்து நிற்பார்கள். அன்றைக்கு 'ஏன் விஜய்யை கூப்பிட்டோம்' என்று நீங்கள் நினைப்பீர்கள்.

நான் என்ன பேசினாலும் 'இது என்ன சினிமாவா?' என்று ஆரம்பித்து விடுகிறார்கள். நானே சினிமாவை விட்டுவிட்டேன். ஆனால் அவர்கள் அதை விடுவதாக இல்லை.

தேர்தலை ஒட்டி சில கருத்துக் கணிப்புகள் வருகின்றன. அவற்றில் சில சரியாகவும் இருக்கின்றன. கூடவே சில 'கடுப்புக் கணிப்புகள்' வருகின்றன. அந்த கடுப்புக் கணிப்பாளர்களுக்கு நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், ஒவ்வொரு வீட்டிலும் த.வெ.க. இருக்கிறது. இதை நம்பவில்லை என்றால் நீங்கள் எடுத்த கடுப்புக் கணிப்பை ரப்பர் வைத்து அழித்துவிட்டு மீண்டும் எடுத்துப் பாருங்கள். அப்போதும் த.வெ.க பற்றி அதே 'ரிசல்ட்' தான் வரும். த.வெ.க. எல்லோரது வீட்டிலும் இருக்கிறது. " என்று தெரிவித்துள்ளார்.






# ஜெயலலிதாவுக்கு ‘பாரத ரத்னா’ வழங்கவேண்டும்: மாநிலங்களவையில் அ.தி.மு.க எம்.பி. கோரிக்கை

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு நாட்டின் உயரிய சிவிலியன் விருதான பாரத ரத்னா வழங்க வேண்டும் என்று மாநிலங்க ளவையில் அ.தி.மு.கவின் எம்.பி. தனபால் கோரிக்கை வைத்துள்ளார்.

இது தொடர்பாக மாநிலங்களவை யில் பேசிய தனபால்,

“தமிழ்நாட்டின் மக்களுக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு நாட்டின் மிக உயரிய சிவிலியன் விருதான பாரத் ரத்னா விருது வழங்கப்படுதை மத்திய அரசு உறுதிப்படுத்த வேண்டும். நிர்வாகத் திறமையும் அரசியல் துணி வும் ஒருங்கே கோண்ட ஒரு தலை வராக மாற்றத்தை ஏற்படுத்திய ஒரு தலைவராக அவர் திகழ்ந்தார்.

திரைத்துறையில் பணியாற்றிய ஜெயலலிதா, தமிழக முதல்வராக உயர்ந்தவர். அவர் மக்களின் நம்பிக் கையை பெற்று பல முறை முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பெண்கள்,



ஏழைகள், பிற்படுத்தப்பட்ட மக்களின் அன்பை பெற்றவராக அவர் இருந்தார். மக்களால் நான்; மக்களுக்காகவே நான் என்ற அவரது கொள்கை, அவரது அரசில் பிரதிபலித்தது.

தாலிக்கு தங்கம் திட்டம், தொட்டில் குழந்தை திட்டம், அனைத்து மகளிர் காவல் நிலையம், மழைநீர் சேகரிப்பு, மகப்பேறு உதவிகள், அம்மா கிளினிக், அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா லேப்டாப், பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச சைக்கிள், பணிபுரியும் பெண்களுக்கு அம்மா ஸ்கூட்டி, அம்மா குழந்தை பெட்டகம், அம்மா சிமெண்ட், அம்மா கிரைண்டர், மிக்சி, அம்மா டேபிள் பேன், அம்மா மருந்தகம்.. போன்ற திட்டங்களை வழங்கியவர் ஜெயல லிதா. இவை, உணவு பாதுகாப்பு, சுகா தார பாதுகாப்பு, கல்வி, வேலைவாய்ப்பு, பெண்கள் முன்னேற்றம் ஆகியவற்றுக்கு உதவியாக இருந்துள்ளன.

இட ஒதுக்கீட்டின் அளவை 69 வீதம் உயர்த்தி அதை உறுதிப்படுத்திய ஜெயலலிதாவின் நடவடிக்கை இந்திய சமூக நீதி அரசியலில் மிக முக்கியமா னதாகப் பார்க்கப்படுகிறது. இதன்மூலம் அவர் சமூக நீதி காத்த வீராங்கனை என்ற பட்டத்தைப் பெற்றார்.

சட்டம் ஒழுங்கு, நிர்வாக ஒழுங்கு, தமிழ் கலாச்சாரம், தமிழ் மொழி ஆகியவற்றை பாதுகாப்பதில் தன்னி கரற்றவராக விளங்கினார். அவருக்கு பாரத் ரத்னா விருதை வழங்க மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும்.” என்று வலியுறுத்தினார்.

# ஊழல் வழக்கில் ஷேக் ஹசீனாவுக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை



அரசு வீட்டு வசதி திட்டத்தில் நிலம் ஒதுக்கியதில் நடந்த முறைகேடு தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து டாக்கா சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அரசு வீட்டு வசதி திட்டத்தின் மூலம் 7,200 சதுர அடி கொண்ட இரண்டு மனைகள் ஒதுக்கியதில் விதிகள் மீறப் பட்டு, முறைகேடுகள் நடந்துள்ளதாகக் கூறி பங்களாதேஷ் ஊழல் தடுப்பு ஆணையம் ஷேக் ஹசீனா, அவரது மருமகன் ரத்வான் முஜிப் சித்திக், மருமகள்கள் துலிப் ரிஸ்வானா சித்திக், அஸ்மினா சித்திக் உள்ளிட்டோருக்கு எதிராக வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கை விசாரித்த டாக்கா சிறப்பு நீதிமன்ற நீதிபதி ரபியுல் ஆலம் நேற்று தீர்ப்பளித்தார்.இரண்டு நிலங்கள் ஒதுக்கப்பட்டது தொடர்பான இரண்டு தனித்தனி வழக்குகளிலும் ஷேக் ஹசீனாவுக்கு தலா 5 ஆண்டுகள் என மொத்தம் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக் கப்பட்டுள்ளது.

ரத்வான் முஜிப் சித்திக், அஸ்மினா சித்திக் ஆகியோருக்கு இரண்டு வழக்கி லும் தலா 7 ஆண்டுகள் சிறைத் தண் டனை விதிக்கப்பட்டுள்ளது. நீதிமன் றத்தில் சரணடைந்த ஒரே குற்றவாளி யான முகமது குர்ஷித் ஆலமுக்கு தலா ஓர் ஆண்டு என இரண்டு ஆண்டு கள் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

தண்டனை பெற்ற அனைவருக்கும் தலா ஒரு லட்சம் டாக்கா அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதத்தை கட்ட தவறினால் கூடுதலாக 6 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண் டும் என்றும் உத்தரவில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

பங்களாதேஷி கடந்த ஆண்டு நடந்த போராட்டங்களை அடுத்து, 2025 ஒகஸ்ட் 5 ஆம் திகதி பிரதமர் ஷேக் ஹசீனா டாக்காவில் இருந்து தப்பி விமானம் மூலம் இந்தியா வந்து சேர்ந்தார். தற்போது அவர் இந்தியாவில் வசித்து வருகிறார். நீதிமன்ற விசாரணையின் போது அவரை தலைமறைவானவர் என தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.



# இந்திய இறக்குமதிக்கான வரியை 18 சதவீதமாக குறைத்தார் ட்ரம்ப்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோருக்கு இடையிலான பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையே புதிய வர்த்தக ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் மோடியின் வேண்டுகோளுக்கு இணங்க, இந்தியப் பொருட்கள் மீதான பரஸ்பர வரியை அமெரிக்கா உடனடியாக 25 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாகக் குறைத்துள்ளது.

இந்தியா மற்றும் அமெரிக்கா இடையிலான உறவு கடந்த ஓர் ஆண்டுகாலமாக சுமுகமானதாக அமையவில்லை. வரி விதிப்பு, வர்த்தக உறவு என பல்வேறு காரணங்கள் இதன் பின்னணியில் உள்ளன.

இந்த சூழலில் நேற்று திங்கள்கிழமை இந்தியாவுக்கான இறக்குமதி வரியை 25 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக குறைப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார்.

இந்த அறிவிப்புக்கு முன்னதாக, பிரதமர் நரேந்திர மோடி உடன் ட்ரம்ப் தொலைபேசி உரையாடலை மேற்கொண்டிருந்தார். அதில்தான் இருதரப்புக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது. இதை ட்ரம்ப் தனது ட்ரூத் சோஷியல் சமூக வலைதள பதிவு மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக ஒப்பந்தத்தை உறுதி செய்துள்ளார்.

இந்தியாவுக்கு 25 சதவீதம் பரஸ்பர வரி மற்றும் கூடுதல் வரி 25 சதவீதம் என மொத்தம் 50 சதவீதம் வரி விதித்தது அமெரிக்கா. இந்நிலையில், தற்போது பரஸ்பர வரியை 18 சதவீதமாக குறைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. ட்ரம்பின் இந்த அறிவிப்பை பிரதமர் மோடி வரவேற்று நன்றி தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் வெளியிட்டுள்ள பதிவில், "பிரதமர் நரேந்திர மோடி உடன் மேற்கொண்ட உரையாடலை எண்ணி பெருமை கொள்கிறேன். எனது அருமை நண்பர்களில் அவர் ஒருவர். வலிமையான மற்றும் மதிப்புமிக்க தலைவர்களில் ஒருவர். வர்த்தகம், ரஷ்யா - உக்ரைன் போர் என பல்வேறு விஷயங்கள் குறித்து நாங்கள் பேசினோம்.

ரஷ்யாவில் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்துவதாக அவர் உறுதி அளித்தார். மேலும், அமெரிக்கா மற்றும் வெனிசுலாவில் இருந்து எண்ணெய் வாங்குவதாகவும் தெரிவித்துள்ளார். நிச்சயம் இந்த நகர்வு உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வரும்.

பிரதமர் மோடி உடனான நட்பு மற்றும் நான் கொண்டுள்ள மதிப்பு காரணமாக அவரது கோரிக்கையை ஏற்று வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்து முடித்துள்ளோம். அந்த வகையில் பரஸ்பர வரி விதிப்பு 25 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக குறைக்கப்படும். தொழில்நுட்பம், வேளாண், நிலக்கரி மற்றும் பல பொருட்களை அமெரிக்காவில் இருந்து பெறுவதாக பிரதமர் மோடி உறுதி அளித்தார். இந்தியாவுடனான உறவு முன்பை விடவும் வரும் நாள்களில் வலுவாக இருக்கும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் மோடி உடன் தொலைபேசியில் உரையாடிய பிறகு இந்த பதிவு அவர் வெளியிட்டார். இதற்கு பிரதமர் மோடியும் இந்திய மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துள்ளார்.

அமெரிக்கப் பொருள்களுக்கு அதிக வரி விதிக்கும் நாடுகளுக்கு எதிராக பரஸ்பர வரிவிதிப்புக் கொள்கையை அமெரிக்கா கடை பிடிக்கும் என ட்ரம்ப் அறிவித்தார்.

கனடா, மெக்சிகோ உட்பட உலகின் பல்வேறு நாடுகளுக்கும் கடும் இறக்குமதி வரிகளை விதித்துள்ளார். தனது இந்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்ததால், சீனா மீதான வரியை ட்ரம்ப் பல மடங்கு உயர்த்தினார். பின்னர், சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி, வரி விகிதத்தை குறைத்தார்.

இந்தியப் பொருள்களுக்கு ஏற்கெனவே 25 சதவீத வரி விதித்த ட்ரம்ப், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை காரணம் காட்டி, கூடுதலாக 25 சதவீதம் வரியை விதித்து, இந்தியாவுக்கான வரியை 50 சதவீதமாக உயர்த்தினார்.

ட்ரம்பின் வரிவிதிப்பு நடவடிக்கையால், இந்தியாவில் தொழில் துறை கடும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளது. தமிழகத்திலும் துணி, ஆடைகள், இயந்திரங்கள், ஓட்டோமொபைல், நகைகள், ரத்தினக் கற்கள், தோல் காலணிகள், கடல் பொருள்கள், இரசாயனங்கள் உள்ளிட்ட துறைகள் பாதிக்கப்பட்டன. தற்போது இதில் பரஸ்பர வரியை 18 சதவீதமாக அமெரிக்கா குறைத்துள்ளது.




# பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு ஐ.சி.சி. ஆப்பு?

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தைப் புறக்கணிக்கும் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு பாகிஸ்தானுக்கு சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) அறிவுறுத்தியுள்ளது.

அவ்வாறு செய்யாவிட்டால் பாகிஸ்தானை சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து முற்றாகத் தடை விதிக்கவும் பாகிஸ்தான் அணியின் நிதி ஆதாரங்களை முடக்கவும் ஐ.சி.சி ஆலோசித்து வருகிறது எனவும் தகவல் வெளியாகி இருக்கிறது.

10ஆவது ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 7ஆம் திகதி முதல் மார்ச் 8ஆம் திகதி வரை இலங்கை மற்றும் இந்தியாவில் நடக்கவுள்ளது.

இந்தியாவில் தமக்கான பாதுகாப்பு நிலைமைகளைக் காரணம் காட்டி இத்தொடரிலிருந்து பங்களாதேஷ் அணி ஏற்கனவே விலகிய நிலையில், அதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் பாகிஸ்தான் அணி, இலங்கையில் நடக்கும் போட்டிகளில் பங்கேற்கும். ஆனால் இந்தியாவுக்கு எதிரான போட்டியில் மாத்திரம் பங்கேற்காது என அறிவித்தது.

இந்நிலையில், இந்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு சர்வதேச கிரிக்கெட் சபை பாகிஸ்தானை எச்சரித்துள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டி இலங்கையில் நடைபெறும் வகையில் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பீற்றர்சன் கேட்ட கேள்வி

ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் இந்தியாவுக்கு எதிரான போட்டியிலிருந்து பாகிஸ்தான் விலகியமை குறித்து முன்னாள் வீரர்கள் பலர் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், இங்கிலாந்து அணியின் முன்னாள் அதிரடி வீரர் கெவின் பீட்டர்சன் தனது எக்ஸ் தளத்தில் ஒரு முக்கியமான கேள்வியை முன்வைத்துள்ளார்.

அவர் தனது பதிவில், இந்த உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இந்தியாவும் பாகிஸ்தானும் சந்திக்க முடியுமா என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால், ஒருவேளை அப்படி ஒரு சூழல் அமைந்தால், உலகக் கிண்ண இறுதிப் போட்டியையும் பாகிஸ்தான் புறக்கணிக்குமா?" என்று கேள்வி எழுப்பியுள்ளார். பீட்டர்சனின் இந்தக் கேள்வி, பாகிஸ்தானின் முடிவில் உள்ள சிக்கல்களைச் சுட்டிக் காட்டியுள்ளது. அத்துடன், கிரிக்கெட் உலகில் புதிய விவாதத்தையும் ஏற்படுத்தியுள்ளது.



# இன்றைய ராசி பலன்கள் - 03.02.2025



## மேஷம்

கணவனின் வருமானம் அறிந்து மனைவிமார்கள் செலவு செய்ய வேண்டும். இல்லை என்றால் வட்டிக்கு கடன் வாங்கி திரும்ப செலுத்த இயலாமல் கஷ்டப்பட வேண்டிய நிலை உருவாகலாம். சந்திர பகவானின் அனுக்கிரகத்தால் தொழிலில் கணிசமான லாபம் கிடைக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் பார்ப்பீர்கள். உட்காரக்கூட நேரமில்லாமல் பொருளாதாரத்தைப் பெருக்க ஓயாது வேலை பார்ப்பீர்கள். கண்ட இடங்களில் சாப்பிட்டு வயிற்றை கெடுத்துக் கொள்ளாதீர்கள். கணவன் மனைவிக்கு இடையே இருந்த கருத்து வேறுபாடு விலகி சகசமான நிலை ஏற்படும். பெற்றோரின் மனநிலையில் புரிந்து பிள்ளைகள் நடந்து கொள்வார்கள். மங்கள காரியங்களால் வீட்டில் கலகலப்பு கூடும். விருந்தினர்கள் வருகையால் வீடு களை கட்டும். விவசாய உற்பத்தியில் அதிக முனைப்பு காட்டுவீர்கள்.



## ரிஷபம்

யாருக்காக நீங்கள் பாடுபடுகிறீர்களோ அவர்களே உங்களை புரிந்து கொள்ளாமல் மனம் நோகும்படி நடந்து கொள்வார்கள். மிக கவனமாக செயல்பட வேண்டிய காலம். சின்ன சின்ன விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. சந்திர பகவான் நல்லது கெட்டது என கலந்து இந்த வாரத்தில் உங்களுக்கு பலனை கொடுப்பார். திட்டம் போட்டு செய்யும் தொழிலில் சில சறுக்கள் ஏற்படலாம். ஆசை வார்த்தை காட்டும் நண்பர்களை அதிகம் நம்ப வேண்டாம். அந்தஸ்தை உயர்த்திக்கொள்ள ஆடம்பரமாக செலவு செய்வீர்கள். எதிர்பார்த்த இடத்தில் தாமதம் இன்றி பணம் கிடைக்கும். தொழில் வேகமாக வளர்ச்சி அடையும். குடும்பத்தில் உங்கள் திறமையை காட்ட முயற்சி செய்தால் மனைவி கோபித்துக் கொண்டு தாய் வீட்டுக்கு சென்று விடுவார். பணத்தட்டுப்பாடு தலைக்கு மேல் போகும் நேரம் இது.



## மிதுனம்

பூர்வீக சொத்தில் சகோதர சகோதரிகளால் வில்லங்கம் உண்டாகும். அதை நிவர்த்தி செய்வதற்காக நீதிமன்றத்தை நாடி செல்வதற்கான கட்டாயம் ஏற்படும். உலவுகின்ற நிலவும் உங்களுக்கு அனுசரணையாக இல்லாததால் எதிர்பாராத செலவுகள் வந்து கையில் இருந்த காசுக்கு வெடி வைக்கும். ெ தொழில் துறைகள் சீராக நடக்கும். வியாபாரத்தில் அதிக லாபத்தை எதிர்பார்க்க முடியாத நிலை உண்டாகும். உறவினர் வகையில் ஏதாவது வில்லங்கம் வந்து மன அமைதியை கெடுக்கும். எப்படிப்பட்ட இடையூறுகள் தொழிலில் ஏற்பட்டாலும் அதை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். அரசாங்க ஒப்பந்த வேலைகளில் கால தாமதமாகும். நண்பர்களின் உதவியால் வெளிநாடு செல்வீர்கள். எதிர்பாராத பண வரவு திக்கு முக்காட வைக்கும்.



## கடகம்

நடந்து செல்லும் இடமெல்லாம் நந்தவனமாக பூத்து சிரிக்கும் காலம் இது. எந்த தொழிலை தொட்டாலும் ஏற்றத்தை கொடுக்கும். உங்களின் செல்வாக்கும் புகழும் வெளியிடங்களில் கொடி கட்டி பறக்கும். நினைத்ததை நடத்தி முடிப்பதற்கு உறவினர்களும் நண்பர்களும் உங்களுக்கு உதவியாக இருப்பார்கள். சந்திர பகவான் வியாபார வெற்றிக்கு உறுதுணையாக நிற்கிறார். விவசாய தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள். வழக்கறிஞர்கள், கல்லூரி விரிவுரையாளர்கள் தங்களுடைய புகழை நிலை நாட்டுவார்கள். வேலை தேடியவர்களுக்கு நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் இருந்த தடைகள் அகலும். சுப காரியங்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வீட்டில் விருந்த நிகழ்ச்சிகளால் மகிழ்ச்சி பொங்கு வழியும். அரச ஆதரவு புதிய ஒப்பந்தங்கள் பெறுவதற்கு வழிவகுக்கும்.



## சிம்மம்

பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்த இரவு பகலாக உழைப்பீர்கள். புதிய முதலீடுகள் மூலம் தொழிலை விரிவுபடுத்தி உற்பத்தி பெருக்கத்தை உண்டு பண்ணுவீர்கள். சந்திரனின் இடப்பெயர்ச்சிகள் சிறப்பான பலன்களையே தரப்போகின்றன. பழைய கடன்கள் மள மள என்று வசூல் ஆகும். சிறு வியாபாரிகள் அபிரிமிதமான லாபத்தை பார்ப்பார்கள். அலங்கார பொருள் விற்பனை அமோக பலனை கொண்டு வரும். கலைத்துறையினருக்கு பிரகாசமான எதிர்காலத்தை ஏற்படுத்தும். வெளிநாட்டில் தங்கள் திறமையை காட்டி பெரிய லாபத்தை அடைவார்கள். வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் தொழிலில் சாதனை படைப்பார்கள். பிள்ளைகள் படிப்பில் அக்கறை காட்டி பெற்றோரை பெருமைப்படுத்துவார்கள். எதிர்ப்புகளை இருந்த இடம் தெரியாமல் செய்வீர்கள்.



## கன்னி

கூட இருந்தே உங்களை கெடுக்க நினைத்த உறவினர்களின் உள்நோக்கத்தை இந்த வாரத்தில் தெளிவாக புரிந்து கொள்வீர்கள். அவர்களிடம் இருந்து விலகி இருப்பது மிகவும் நல்லது. சந்திரனின் இடப்பெயர்ச்சியும் அவ்வளவு சாதகமான நிலையில் இல்லை. முதலீட்டுக்கு தகுந்த வருமானம் கிடைப்பது சற்று சிரமம்.

புதிய வேலை வாய்ப்பு தேடி வரும். பதவி உயர்வு கிடைக்கும். நடைபாதை வியாபாரிகள் சிறப்பான பலனை அடைவார்கள். கலை துறையினர் பிரபலமடைவார்கள். கல்விக்காக அதிகம் செலவு செய்வீர்கள். தாய் வழி சொத்து கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு. எவ்வளவு தான் இணக்கமாக நடந்தாலும் குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் தாண்டவம் ஆடும். வாக்கு கொடுத்தால் கண்டிப்பாக அதை காப்பாற்ற வேண்டும்.



## துலாம்

உண்ட வீட்டுக்கு ரெண்டகம் பண்ணும் கூட்டம் உங்களுக்கு ஆசை வார்த்தை சொல்லும். அதில் மயங்கி இருப்பதை இழந்து விடாதீர்கள். வளர்பிறை சந்திரன் நீங்கள் செய்யும் வியாபாரத்துக்குப் பல வகையில் உதவியாக இருப்பார். இரு மடங்கு எச்சரிக்கையோடு எதையும் செய்யுங்கள். நல்ல நண்பர்களே விரோதியாக மாறி தொழிலுக்கு இடையூறு செய்வார்கள். ஏற்றுமதி இறக்குமதி தொழிலை சிறப்புடன் நடத்துவீர்கள். வேலைக்காக நீங்கள் செய்திருந்த விண்ணப்பம் பரிசீலிக்கப்படுவதில் சுணக்கம் உண்டாகும். அலைச்சல் அதிகமாகி உடல் சோர்வு உண்டாகும். கொடுத்த இடத்தில் பணம் திரும்பி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். ஏதாவது வீட்டுச் செலவு வந்து பொருளாதார சிக்கலை உண்டாக்கும். வியாபாரம் மந்தமான நிலையில் நடக்கும்.



## விருச்சிகம்

செலவுகளை கட்டுப்படுத்த எவ்வளவு முயற்சி செய்தாலும் அதில் உங்களுக்கு தோல்விதான் கிடைக்கும். புதிதாகத் தொடங்கும் தொழிலுக்கு நண்பர்களின் உதவி தாராளமாக கிடைக்கும். போட்டி போட்டு தொழிலில் வெற்றி கண்டு எதிரிகளை பொறாமைப்பட வைப்பீர்கள். போட்டி பந்தயங்களில் மிகப்பெரிய லாபத்தை அடைவீர்கள். சொந்த பந்தங்களால் மனச்சங்கடம் அடைவீர்கள். கலைத் துறையினருக்கு பொற்காலம். சனி 7 ஆம் வீட்டில் இருக்கிறார். துணி வியாபாரிகள் துணிவோடு தொழிலில் இறங்கி அதிக மேன்மை அடைவார்கள். உங்களின் வளர்ச்சியை கண்டு எதிரிகள் வாயடைத்து நிற்பார்கள். தேவையில்லாத செலவுகளால் கையிருப்பு கரையும். வியாபாரத்திற்கு இடையூறாக இருந்த வில்லங்கங்கள் விலகும்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.02.2025




துணிச்சலுடன் தொழிலை மேம் படுத்துவீர்கள். வளர் நிலவின் வசந்த ஒளி உங்கள் வாழ்க்கை பாதையில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும். இழு பறியாக இருந்த இடப்பிரச்சனையை புத்திசாலித்தனமாக தீர்ப்பீர்கள். தாய் மாமன் வகையில் சில சங்கடங்கள் வரலாம். உற வினர்களுடன் ஒருமைப்பாட்டோடு நடந்து கொள்ளுங்கள். நினைத்த காரியத்தை நண்பர்களில் உதவியோடு சிறப்பாக முடிப்பீர்கள். ஏற்றுமதி இறக்குமதி தொழில் மிகுந்த லாபத்தை கொடுக்கும்.

ஏதாவது ஒரு பிரச்சனை குடும்பத்தில் உருவாகி மன நிம்மதியை கெடுக்கும். உங்கள் செல்வாக்கு அதி கரிக்க விருந்து நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வீர்கள். நீண்டகால மனக் கவலை உங்களை விட்டு நீங்கும். புதிய உறவுகளால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்.




பொருளாதாரத்தில் எதிர்பார்த்த வெற்றியை அடைந்து பூரிப்புக் கொள் வீர்கள். நீண்ட காலமாக இழுவை யில் இருந்த வழக்கை முடித்து வைப் பீர்கள். சந்திரனின் நகர்வுகள் சில முன்னேற்றமான பலன்களை கொண்டு வரும். புதிய நண்பர்களின் சேர்க்கையால் வியாபாரத்தில் பல வெற்றிகளை அடைவீர்கள்.

பிள்ளைகள் படிப்பில் அதிக அக்கறை காட்டுவார்கள். கல்வி செலவு அதிகரித்து கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்படும். உறவினர்களும் நண்பர்களும் உதவிகரமாக இருப்பார்கள். மனம் விட்டு பேசி குடும்ப பிரச்சினை யைத் தீர்ப்பீர்கள். காதல் கைகூடி வந்து நீண்ட காலக் கனவு நிறைவேறும்.

கடல் கடந்து பயணம் செல்லக் கூடிய வாய்ப்பை நண்பர் ஏற்படுத்தித் தருவார். எதிர்பாராத தன வரவு உண்டாகும்.




உடைந்து போன உறவுகளை ஒட்ட வைப்பதற்காக பாடுபடுவீர்கள். மனைவி யின் தேவையறிந்து நடந்து கொண்டு மகிழ்ச்சியில் ஆழ்த்துவீர்கள். எதிர் பாராத வகையில் பணம் வருவதற் கான வாய்ப்பு இருக்கிறது. ஆடம்பரமாக செலவு செய்வதை நிறுத்திக் கொள்ளுங்கள். தொழிலுக்கு இருந்த இடையூறுகளை தகர்த்து எறிவீர்கள். வேலை இடத்தில் எச்சரிக்கையாக இருங்கள். வீட்டில் மங் கல காரியங்கள் சிறப்பாக நடக்கும்.கொடுக்கல் வாங் கல் விவகாரங்களில் கவனமாக இருங்கள். படித்துப் பார்த்து பத்திரங்களில் கையெழுத்து போடுங்கள். பெரிய மனிதர்களின் சந்திப்பால் பொருளாதாரம் முன்னேற்றம் காண்பீர்கள். பிள்ளைகளால் சில பிரச்சினைகளை சந்திக்க வேண்டிவரும். ஆன்மீகப் பயணம் மேற் கொள்வீர்கள்.




எதிர்ப்புகளை முறியடித்து தொழிலை நிலைப்படுத்த முனைப்போடு செயல் படுவீர்கள். கூட்டுத் தொழிலில் ஈடுபட அதிக ஆர்வம் காட்டுவீர்கள். சந்திர னின் நகர்வுகள் சில நேரங்களில் பாதக மான நிலையை ஏற்படுத்தலாம். பக்குவ மாக நடந்து கொள்ளுங்கள். செவ்வாய் 7ஆம் இடத் தில் இருக்கிறார்.

உங்கள் எண்ணப்படி திருமண விடயம் சுலபமாக நடக்காது. சுக்கிரன் 5 ஆம் வீட்டில் இருக்கிறார். கலைத் துறையினர் சில சிரமங்களை சந்திக்க வேண்டிவரும்.

கட்டுமான தொழில் கை கொடுத்து தூக்கிவிடும். இரும்பு சம்பந்தப்பட்ட வியாபாரங்கள் அமோகமாக நடக்கும். ராகு ராசியிலேயே அமர்ந்திருக்கிறார். மனைவி மக்க ளின் போக்கு மனதை காயப்படுத்தும். பொறுமையாக நடந்து கொள்ளுங்கள்.



# ‘முத்திரை பதித்த யாழ். முஸ்லிம்கள்’ நூல் பரீட் இக்பால் யாழ் முதல்வரிடம் கையளிப்பு

கலாபூஷணம் பரீட் இக்பாலினால் எழுதப்பட்டு அண்மையில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வெளியிடப்பட்ட ‘முத் திரை பதித்த யாழ் முஸ்லிம்கள்’ எனும் யாழ்ப்பாணம் முஸ்லிம் வரலாற்று முக்கி யத்துவமிக்க – பல்துறைசார் ஆளுமை களின் வரலாற்றை எடுத்தியம்பும் / நூல் நேற்று யாழ் மாநகர முதல்வர் வி.மதிவத னிக்கு முதல்வர் அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

நூலாசிரியரான கலாபூஷணம் பரீட் இக்பால் நேற்று யாழ் மாநகர முதல்வரை



அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந் துரையாடி, நூல் தொடர்பிலும், அதில் உள்ளடங்கப்பட்டுள்ள ஆளுமைக ளின் சிறப்பம்சங்கள் தொடர்பிலும் முதல் வருக்கு தெளிவுபடுத்தினார். முதல்வருக்கு நூலின் பிரதி ஒன்றை உத்தியோகபூர்வ மாக கையளித்தார்.

மேற்படி நூல் முதல்வருக்கு கைய ளிக்கும் நிகழ்வின் போது மாநகரசபை உறுப்பினர் என்.எம்.அப்துல்லாஹ்வும் நிகழ்வில் இணைந்திருந்தார். மாநகர சபை உறுப்பினருக்கும் நூல் பிரதி ஒன்றை நூலாசிரியர் பரீட் இக்பால், முதல்வர் முன்னிலையில் கையளித் தார்.